# சுதந்திரன்
SUTANTIRAN

வள்ளுவர் ஆண்டு 2008
கார்த்திகை 24
துல்ஹஜ் 27
வெள்ளி (9-12-1977)
நிறுவியது 1947
புத்தகம் 31
இதழ் 53
யாழ். தொ.பே.இல. 352
விலை சதம் 60




# சிங்கப்பூர் பாணியில் இங்கும் அடக்குமுறை தர்பார்!

## பாஸிஸ சட்டங்கள் உருவாகின்றன!

## 'சர்வாதிகாரி' ஆகிறார் ஜே ஆர்!

### எதிர்க்கட்சி முதல்வரின் கூற்று உண்மையாகிறது!

சிங்கப்பூரில் பயங்கர பாஸிஸ அடக்குமுறைச் சட்டங்களின் கீழ் எதிர்க்கட்சிகளும், மாற்றுக் கருத்துள்ளோரும் அடக்கியொடுக்கப்படுவதுபோல—இலங்கையிலும் அடக்குமுறைதர்பார் ஒன்றுக்கு ஜே. ஆர். ஆட்சி கால்கோள் இட்டுவருகிறது. தமிழ்த்தேசிய இனம் கடந்த தேர்தலின் போது திட்டவட்டமாக வெளிப்படுத்தியுள்ள அபிலாஷைகளையும் விடுதலை வேட்கையையும் பாஸிஸ சட்டங்கள் மூலம் முறியடித்திடவும், ஜனநாயகம் பற்றி மூச்சுக்கு முப்பது தடவை உச்சரிக்கும் ஜே. ஆர். ஆட்சி இப்போது தயாராகிவருகிறது.

இலங்கையிலும் சிங்கப்பூர் பாணியைப் பின்பற்றி ஓர் பாஸிஸ ஆட்சியைப்புகுத்த சூழ்ச்சி நடப்பதாக வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சி முதல்வர் அ. அமிர்தலிங்கம் தெரிவித்த அச்சம் இப்போது படிப்படியாக உண்மையாகிவருகிறது.

இலங்கையில் பேச்சுச் சுதந்திரம், எழுத்துச் சுதந்திரம், பத்திரிகை சுதந்திரம், கருத்துச் சுதந்திரம், ஆகிய அனைத்து அடிப்படைச் சுதந்திரங்களும் தங்கு தடையின்றி காப்பாற்றப்படுமென்றும், மனித உரிமைகளும் பேணிப்பாதுகாக்கப் படுமென்றும் ஆட்சிக்கு வந்த நாட்களில் பிரதமர் ஜே. ஆர். திரும்பத் திரும்பக் கூறி தம்மை உண்மையான ஜனநாயகவாதிபோல காட்டிக்கொண்டபோதிலும், இப்போது அரசின் அந்தரங்க திட்டம் ஒவ்வொன்றாக அம்பலமாகி வருகிறது. எதிர்க்கட்சிகளின் உரிமைகளும், தொழிற்சங்கங்களின் உரிமைகளும் பறிக்கப்பட்டு வருகின்றன?

எந்த ஒரு பிரச்சினையிலும் மக்களின் அபிப்பிராயத்தை திரட்டி வெளிப்படுத்த ஊர்வலங்களும் ஆர்ப்பாட்டங்களும் நடத்துவது ஜனநாயகத்தில் ஏற்றுக்கொள்ளப் பட்ட ஓர் உரிமையாகும்.

ஆனல்—இப்போது ஜே. ஆர். ஆட்சியின் கீழ் அரசியல் கட்சிகள் ஆர்ப்பாட்டங்களும் ஊர்வலங்களும் நடத்துவது முற்ருகத் தடைசெய்யப்பட்டிருக்கிறது.

#### தொழிற்சங்க உரிமை பறிமுதல்

தொழிற்சங்கங்கள் வேலை நிறுத்தம் செய்யும் உரிமையும் இப்போது பறிக்கப் பட்டுவிட்டது. எந்த ஒரு வேலை நிறுத்தத்துக்கும் அரசியல் மூலம் பூசப்பட்டிருப்பதாகவோ, அரசாங்கத்தைக் கவிழ்க்கும் நோக்குடையது என்று முத்திரை யிட்டோ தடைசெய்ய முடியும். இது தொழிலாள வர்க்கத்துக்கு எதிராக ஏவிவிடப்பட்ட பயங்கர அடியாகும்.

#### உள்நாட்டு பாதுகாப்பு சட்டம்

இப்போது தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கையை கிள்ளியெறியவும் சட்டமியற்றப் பட்டுவருவதாக செய்திகள் கூறுகின்றன, 1977 பொதுத் தேர்தலில் தமிழ் தேசிய இனம்ஜனநாயகமுறைப்படி திட்டவட்டமாக வழங்கியுள்ள தீர்ப்பினை—தேசிய விடுதலை வேட்கையை—ஜீரணிக்க முடியாத சிங்கள ஏகாதிபத்தியம். தமிழினத்தின் இந்தஜனநாயககோரிக்கையை முறியடித்திட உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம் என்ற பெயரில் பயங்கர பாஸிஸ — ஜனநாயக விரோத அடக்குமுறைச்சட்டங்களை இப்போது திரை மறைவில் உருவாக்கி வருகிறதாக செய்திகள் கூறுகின்றன-

இச்சட்டத்தின் கீழ் தனி நாடு கோரிக்கையை முன் வைப்பதும், அதற்காக பாடு படுவதும் அதை பிரசாரம் செய்வதும் தண்டனைக்குரிய குற்றங்களாகப் பிரகடனப் படுத்தப்பட இருக்கிறதாம். இச்சட்டத்தின்படி, தமிழ் தேசிய இனத்தின் சுதந்திரக் கோரிக்கைக்கு தேசவிரோதம், தேசத்துரோகம் என்று முத்திரை குத்தப்படலாம்.

சட்டத்தைமீறி தனிநாடு கோருபவர்களுக்கு தண்டனையாக சிறைவாசம், சொத்துப்பறிமுதல், குடியியல் உரிமைகள் பறிமுதல் போன்ற தண்டனைகள் வழங்கப்படக் கூடியதாக இச்சட்டம் அமையுமாம்.

சர்வதேச மனித உரிமை சாசனத்தின்படி பொலிசாரால் கைது செய்யப்படும் ஒருவரை 24 மணிநேரத்துக்குள் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யவேண்டும். இதுவே தற்போது சாதாரணமாகப் பின்பற்றப்பட வேண்டிய சட்டமாகும், இதை மாற்றியமைத்து பொலிசார் தாம் கைதுசெய்யும் ஒருவரை, 30 நாட்களுக்கு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யாமல் தங்கள் பொறுப்பில் வைத்திருக்கவும் புதிய சட்டத்தில் வகை செய்யப்படுமாம். இது பிரதமர் தேசிய அரசுப் பேர

—8-ம் பக்கம் பார்க்க

### மனித உரிமை தினம் லண்டனில் ஆர்ப்பாட்டம்!

ஈழத்தில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையும் ஏனைய உரிமைகளும் மறுக்கப்படுவதை ஐ. நா. சபையின் மனித உரிமை நாளில் (10-12-77) உலகின் கவனத்துக்கு கொண்டுவர லண்டனில் உள்ள தமிழர் இயக்கங்கள் முடிவுசெய்துள்ளன.

இதற்காக இன்று 9-12-77 லண்டனிலுள்ள ஐக்கியநாடுகள் சபை அலுவலகத்தின் முன் ஓர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தை லண்டன் ஈழ விடுதலை இயக்கத்தினர் நடத்த விருக்கின்றனர். இந்த ஆர்ப்பாட்டம், இலங்கையில் தமிழ் மக்களின் உரிமைகள் பறிக்கப்படுவதை உலக அரங்கில் அம்பலப் படுத்தி விடுகிறது.

### மனித உரிமைகள் தின பொதுக்கூட்டம்

மனித உரிமைகள் தினத்தை முன்னிட்டு நாளை சனிக்கிழமை (10- 12- 77) மாலை 4.30 மணிக்கு யாழ் றிம்மர் மண்டபத்தில் பொதுக் கூட்டமொன்று முன்னுள் செனட்டர் சு. நடராச தலைமையில் நிகழவுள்ளது. இக்கூட்டத்தில்இளைப் பாறிய பல்கலைக்கழக பேராசிரியர் திரு. கு. நேசையா அவர்களும் கோப்பாய் பிரதிநிதி திரு. கதிரவேற்பிள்ளை அவர்களும் சொற்பொழிவாற்றுவார்கள்.

## தமிழினத்தின் ஜனநாயகத் தீர்ப்பை முறியடித்திட உள்நாட்டு பாதுகாப்புச் சட்டம்?

**தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ஈழக் கொள்கையிலிருந்து ஆனந்தசங்கரி தடம்புரண்டாரா?

"தமிழ் ஈழக்கொள்கையை மறுபரிசீலனை செய்வதற்கு இன்று காலம் கடந்து விட்டது. தமிழ்ஈழம் ஏற்கெனவே அமைந்து விட்டது. தமிழ் ஈழத்தை போர்த்துக்கீயனும், ஒல்லாந்தனும் ஆங்கிலேயனும் படைபட்டாளம் கொண்டு அடக்கியாண்டதுபோல நீங்கள் இப்போது இராணுவமுகாம்களை அமைத்து அடக்கியாளுகிறீர்கள் உங்களுடைய இராணுவ முகாம்கள்— அவை எத்தனை இராணுவ முகாம்களாக இருந்தாலும் அவறறை எதிர்த்து சுதந்திரத் தமிழ் ஈழம் அமையத்தான் போகிறது"



## இதோ அவரது தேசிய பேரவைப் பேச்சு!

## படியுங்கள்! தீர்ப்பளியுங்கள்!

இவ்வாறு 28-11-77ல் தேசிய அரசுப் பேரவையில் பேசிய கிளிநொச்சி பா. உ. திரு. ஆனந்தசங்கரி அவர்கள் முழக்கமிட்டார்.

திரு ஆனந்த சங்கரியின் உரைவருமாறு:-

இப்பேரவையில் உள்ள பல இளம் அங்கத்தினர் வகுப்புவாத அரசியலில் 25 ஆண்டுகள் ஊறித் திளைத்தவர்கள் போலத் தென்படுகிறார்கள். இவர்களில், பலர் தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றிற்குப்பதில் கூற வேண்டிய புனித கடமை எனக்கு இருக்கிறது.

நாங்கள் தமிழ்ஈழம் கோருகிறோம், நாங்கள் தமிழ்ஈழம் காணவந்திருக்கிறோம் என்று எழுந்த வாக்கிலே அவர்கள் எமமைக் கண்டிக்கிறார்கள் எம்மீதுபாய்கிறார்கள் தமிழ் ஈழக் கோரிக்கையை அவர்களால் சகிக்க முடியவில்லை. தமிழ் ஈழம் பற்றிப் பேசுகையில் கொதித்து எழுகிறார்கள்? துடி துடிக்கிறார்கள். அதை நாம் தரமாட்டோம் என்று கூறுகின்றார்கள்' இறுதி மூச்சு உள்ளவரை அதை எதிர்ப்போம் என்று கூறுகிறார்கள். அவ்வாறுகூறுகின்றவர்கள் சற்று நேரம் இருந்து எதற்காக தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகள் தமிழ்ஈழம் பற்றிப் பேசுகின்றார்கள் இந்த தமிழ்ஈழக் கோரிக்கையின் வரலாறு என்ன என்பதைப் பற்றிச் சிந்தித்தார்களா? பொறுமையாக இருந்து அவர்கள் சிந்திக்கவில்லை. அவர்களைத் தாழ்மையாக நான் கேட்பது பொறுமையாகஇருந்துஎமது பிரச்சினைகளை ஆராய்ந்து பாருங்கள் என்பது தான்.

தமிழ்ஈழக் கோரிக்கையை முதன் முதலில் இந்த நாட்டில் தேசியரீதியில், இன ரீதியில் ஒருமனதாகத் தமிழ்ப் பிரதிநிதிகளால்கிளப்பப்பட்டது 1972ம் ஆண்டில் தான். அதுவரை நாம் ஈழம்பற்றிப் பேசவில்லை. தமிழ் அரசுக் கட்சி சமஷ்டி அரசியல் பற்றித்தான் பேசியது "நாங்கள் ஒற்றுமையாக வாழ்வோம்; நாம் ஒற்றுமையாக சிங்கள மக்களோடு வாழத் தயாராக இருக்கிறோம். எங்கள் உரிமைகளை நிலைநாட்டி எங்களுக்குச் சமஷ்டி அரசியல் அமைப்பைத் தாருங்கள்" என்று தமிழ் அரசுக் கட்சி கேட்டது. அதற்கு மாறாகநான் அங்கத்துவம் வகித்த தமிழ்க் காங்கிரஸ் கட்சி, "சமஷ்டி கூடத் தேவையில்லை. நாம் சிங்கள மக்களோடு சரிசமமாக வாழ்ந்தால் போதும்" என்றது. தமிழ்க் காங்கிரஸ் தலைவர் திருாவளர் ஜீ ஜீ.பொன்னம்பலம் அவர்களும்நாமும் இச்சபைக்கு உள்ளேயும் வெளியேயும் இதைத்தான் வலியுறுத்தி வந்தோம். 1972 ஆம் ஆண்டு தாங்கமுடியாத ஒருநிலைக்கு வந்தபிறகுதான் நாங்கள் தமிழ்ஈழ முடிவுக்கு வந்தோம்.

இந்த நாடு 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் அடைந்தது. அதிலிருந்து 1972 ஆம் ஆண்டு வரை ஏறக்குறைய 25 ஆண்டுகள் நாங்கள் தமிழ் ஈழம்பற்றிப் பேசவில்லை; ஒற்றுமை பற்றித்தான் பேசினோம். சுதந்திரம் கிடைத்து எட்டு ஆண்டுகளுக்குள்ளே அதாவது 1956 ஆம் ஆண்டு இந்த நாட்டின் தலைசிறந்த அரசியல் வாதிகளுள் ஒருவராகிய கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் இந்தச் சபையிலே எடுத்து உரைத்தது என்ன? "தமிழ் மக்களுக்கு அநீதி செய்யப்படும் கொடுமை தளர்த்தப்படாது விட்டால் இந்த நாடு பிளவு படவேண்டிய நிலைவரும். இந்த நாட்டைப் பிரித்துத்தாருங்கள் என்று தமிழ் மக்கள் கேட்கும் நிலைவரும்" என்று அவர் அப்போது கூறினார். இதற்கும் ஏறக்குறைய 21 ஆண்டுகளுக்குப் பிறகுதான் நாங்கள் இந்தப்பிரிவினையை வலியுறுத்தினோம். இதைப்பற்றி யாராவது சிந்தித்தீர்களா? நாட்டைப்பிரிக்க வேண்டும் என்று நாம் கூறும் நேரம் கொதித்தெழுபவர்கள் யாராவது இதுபற்றிச் சிந்தித்தீர்களா?

இந்த அரசு ஆட்சிக்கு வந்தபின் நடந்த ஒரு சம்பவம் பற்றி இங்கு குறிப்பிட விரும்புகிறேன். எமதுஎதிர்க் கட்சித் தலைவர் (திரு. அமிர்தலிங்கம்) அவர்கள்மீது பொலிஸ்காரர் தாக்குதல் நடாத்தியது பற்றி என்ன நடவடிக்கை எடுத்தீர்கள் என்று நான் இந்த ஆண்டு ஆகஸ்ட் 19ம் தேதியன்று இச்சபையில் கேட்டபோது சபை முதல்வர் குறுக்கிட்டுச் சொன்னார், "நாங்கள் நடவடிக்கை எடுத்திருக்கின்றோம். கூடிய விரைவில் அதன் பயனைத் தெரிவிப்போம்" என்று. ஆனால் இன்று ஏறக்குறைய மூன்று மாதங்களாகி விட்டன. இன்றுவரை அ[illegible]தப் பொலிசார் மீது எந்த விதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. தாக்கப்பட்டவர் இந்தநாட்டின் சாதாரண பிரசை அல்ல; சாதாரண ஒருபாராளுமன்ற அங்கத்தவர் அல்ல; இந்த கௌரவ சபையின் எதிர்க் கட்சித்தலைவர் மட்டுமல்ல; அவர் இந்த நாட்டின் ஒரு தேசிய இனத்தின் தலைவர் அவர் தாக்கப்பட்டது குறித்து என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது? அரசு எதுவுமே செய்யவில்லை.

> கிளிநொச்சி பா.உ. திரு. வி. ஆனந்தசங்கரி அவர்கள்தமிழ்ஈழக்கொள்கைக்கும் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கும் விரோதமாக தேசிய அரசுப் பேரவையில் பேசி விட்டதாக யூ. என். பி, அடிவருடி தினசதியார் 3-12-77ல் முதலைக் கண்ணீர் வடித்து தமிழ் மக்களைக் குழப்பியிருந்தார் இதோ திரு. ஆனந்தசங்கரியின் உரையைப் படியுங்கள். தினசதியாரின் புழுகு எட்டு நாளைக்கு மட்டுமே என்பதை இதிலிருந்து புரிந்துகொள்ளுங்கள்!-ஆர்

இது இந்த அரசாங்கத்திலே நடந்தது. ஆனால் கடந்த அரசாங்கத்தின் காலத்திலே செய்யப்பட்ட அநியாயங்களை எடுத்துக் கூறுவதானால் பல நாட்கள் தொடர்ச்சியாகக் கூறிக் கொண்டே போகலாம் தமிழாராய்ச்சி மாநாடு யாழ்ப்பாணத்திலே நடந்தபொழுது பத்துப்பேர்களுடைய உயிர் பறிபோனதற்குக்காரணம் பொலிஸ்காரர்களுடைய நடத்தை தான் என்பது நாடு முழுவதும் அறிந்த விஷயம். பத்துப்பேர்களுடைய மரணத்துக்குக் காரணமாக இருந்த பொலிசார் மீது நடவடிக்கை எடுங்கள் என்று நாங்கள் அன்றிருந்த பிரதம அமைச்சரைக் கேட்டோம், ஆனால், அன்றைய பிரதமர் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கவில்லை. பதிலாக அதற்குப் பொறுப்பாக [illegible] பொலிஸ் அத்தியட்சகர் பொலிஸ் அத்தியட்சகராக பதவி உயர்த்தப்பட்டார், பத்துப்பேர்களுடைய உயிர் பறிபோகக் காரணமாக இருந்தவருக்குப் பதவி உயர்வு! ஆனால் சிறையிலே மரணதண்டனை விதிக்கப்பட்டிருந்த மறுசிறு என்பவன் எவ்வாறுஇறந்தார்என்பதை அறிய ஒரு விசாரணை ஆணைக் குழு.கடந்தஅரசாங்கம்தான் அந்த ஆணைக்குழுவை நியமித்தது. இவ்வாறுதான் கடந்த அரசாங்கத்திலே நாங்கள் நடாத்தப்பட்டோம்; இதை இங்கே இருக்கிற புதிய அங்கத்தினர் நன்கு அவதானிக்க வேண்டும்.

இந்த அரசாங்கத்திலே நடந்த ஒரு சம்பவம்; அதையும் சன்சோனிகமிஷன் விசாரிக்கும் என்று நம்புகிறேன். வவுனிக்குளம். கிளிநொச்சி எல்லையிலே உள்ளபிரதேசம் ஐந்து இளைஞர்களை இராணுவத்தினர் நாயைச் சுடுவது போலச் சுட்டார்கள். மூன்று மாதங்களுக்கு முன் நடந்த சம்பவம் இது. இவ்விதம் சுட்டவர்கள் மீது எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை இறந்தவர்களுடைய சடலங்களிலே ஈ மொய்த்துப் புழு நெளியும் வரை உறவினர்கள் பிரேதங்களின் கிட்டக் கூடப் போக முடியாத நிலை இருந்தது. இவ்வாறு ஒன்றல்ல. பல சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

இங்கு கௌரவ நிதி அமைச்சர் அவர்கள் பேசும் போது சொன்னார், தமது அமைச்சில் இரண்டு பெரிய பதவிகளைத்தமிழர்கள் வகிக்கின்றார்கள் என்று. அவர் திறமைசாலிகள் என்பதாலேயே அவர்களுக்கு அந்தப் பதவிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. அவர்கள் தமக்குப் பிரயோசனப்படுவர் என்பதாலேயே அவர்களுக்கு அந்தப்பதவிகளை நிதி அமைச்சர் வழங்கி இருக்கிறாரே ஒழிய எங்களுக்குச் சலுகை செய்வதற்காக அல்ல. தமிழ் இனத்துக்குச் சலுகையாக அவர்களை நிதி அமைச்சர் வைத்திருக்கவில்லை. தமிழ்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காகவும் அவர்களை வைத்திருக்கவில்லை. அவர்கள் திறமைசாலிகளாக இருந்தார்கள். அவர்களது திறமையை அமைச்சர் பாவிக்கின்றார்.

இன்று எத்தனையோ அரசாங்க ஊழியர்கள் தரத் [illegible]ால் கூடியவர்களாக இருந்தும் தங்களுக்குக்கீழ் இருக்க வேண்டியவர்களுக்குக் கீழ் வேலைசெய்கிறார்கள், அரசாங்க அதிபராகக் கடமையாற்ற வேண்டியவர்கள் உதவி அரசாங்க அதிபராகக் கடமையாற்றுகிறார்கள். உதவிஅரசாங்க அதிபராக இருக்க வேண்டியவர்கள் அரசாங்க அதிபர்களாக இருக்கிறார்கள். இப்படியான துர்ப்பாக்கிய சம்பவங்களை நாளுக்கு நாள் நாம் கண்டு கொடுண் வருகின்றோம்.

நாங்கள் தமிழ் ஈழக்கோரிக்கையை வைத்துதேர்தலில் போட்டி போட்டு வந்தவர்கள், எங்களை உங்களால் செல்லாக்காசாக்க முடியும். நாங்கள் சந்தோஷமாக இந்தப் பிரிவினையைக் கேட்கவில்லை. சண்டை பிடித்து தமிழ் ஈழம் தாருங்கள் என்று கேட்பதில்எங்களுக்கு மகிழ்ச்சி இல்லை, எங்களுக்கு அதில் பெருமைஇல்லை, நாங்கள் பாராளுமன்றப் பதவியில் நீடித்திருக்க வேண்டும் என்பதற்காக அப்படிக் கோருவதாக நீங்கள் கூறினால் அது தவறாகும். உங்களால் முடியுமாக இருந்தால் இந்த நாட்டில் சுபிட்ச நிலையை உண்டு பண்ணுங்கள். தமிழ் மக்களுக்கு நியாயம் வழங்குகள். நீதி வழங்குங்கள். பிரிந்து சென்றால் இதிலும் மோசமான நிலைக்கு வந்து விடுவோம் என்று தமிழ் மக்கள் மனதில் படிய வைத்து தமிழ் மக்களிடம் எங்களை செல்வாக்கு இழக்கச் செய்யுங்கள். காலம் கடத்தாமல் இதைச் செய்யுங்கள் என்று நான் கேட்கிறேன்,

ஆகவே, தமிழ்ஈழம் கோருபவர்கள்மீது குறை கூறுவதை விடுத்து தமிழ் ஈழம் கோரக் காரணமாக இருந்தது எது என்பதைக் கண்டுபிடித்து அதற்குப் பரிகாரம் தேடுங்கள் என்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

இந்த நாட்டிலே சிங்கள சமூகத்தைச்சேர்ந்த ஒருவர் தான் பிரதமராக வரக்

—7-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோழைகள் விலகட்டும்! வீரர்கள் தொடரட்டும்!

அன்பு நண்பா,

உன் உள்ளம் இப்போது எரிமலையெனக் கொதித்துக்கிடக்கும்; தமிழினத்தின் மத்தியில் துரோகத்தனத்துக்கும், காட்டிக்கொடுக்கும் கயமைக்கும் முடிவேகிடையாதா? துரோக வரலாற்றுக்கு முற்றுப்புள்ளியே கிடையாதா? எங்கள் இனத்தின் எழுச்சிகண்டு—ஒற்றுமை கண்டு—விடுதலை வேட்கை கண்டு—மருட்சியும் வெருட்சியும், அருட்சியும் கொண்டு இந்த இனத்தின் விடுதலையை எந்தவடிவத்தில் என்றாலும் வழங்காவிடின் இத்தீவில் இனி நிம்மதியே இருக்காது என்பதை சிங்கள இனத்தார் உள்ளூர உணர்ந்து கொண்டு வருகின்ற நல்ல தருணத்திலே மீண்டும் நமது இயக்கததில் ஓர் எட்டப்பன் உருவாகி விட்டானே; 1970ல் வடக்கில் ஒரு மார்ட்டினும், தியாகராசாவும் அருளம்பலமும் தமிழினத்தின் களைகளாக தலையெடுத்ததுபோல, கீழைத்தென் கோடித் தமிழ் ஈழத்தின் நுழைவாயிலான பொத்துவில் தொகுதியில் உதித்த எழுஞாயிற்றின் விடுதலை ஒளிக்கதிர்களை தன் இரு கைகளால் மறைக்க முயற்சிக்கிறாரே அரசியலை அயோக்கியத்தனமாக்கிவிட்ட ஒரு பணக்கார மனிதர்—என்றெல்லாம் உன் நெஞ்சம் பொங்கிக் குமுறுவதை நான் உணர்கிறேன்!

ஆம் நண்பா, பொத்துவில் கனகரத்தினம் அடித்திட்ட குத்துக்கரணம் — திடீர்பல்டி— ஈழத்தமிழினத்தை தலைகுனிய வைக்கின்ற— அரசியலில் ஒரு கேவலமான நிகழ்ச்சியாகும், செல்வாக்குள்ள ஒரு கட்சியிலே சேர்ந்து வெற்றிபெறுவதும், வெற்றிபெற்றதும் தாம் சார்ந்தகட்சிக்கும் மக்களுக்கும் துரோகம் செய்து குத்துக்கரணம் அடித்து பிறிதோர் கட்சியை ஆதரிப்பதும் அரசியலில் கடைந்தெடுத்த அயோக்கியத்தனமாகும்; ஆரோக்கியமாக நேர்மையுடன் இயங்கவேண்டிய அரசியலில், இப்படிக் குத்துக்கரணம் அடிக்கும் கோமாளி அரசியல்வாதிகளை குஷ்டரோகிகள் என்றே நான் கூறுவேன்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் வேட்பாளர் நியமனம் பெற்று, தமிழர் விடுதலைக் கூட்டணியின் தேர்தல் விஞ்ஞாபனத்திலடங்கிய கொள்கைத்திட்டங்களை மக்கள் முன் வைத்து —தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதய சூரியன் சின்னத்தின் கீழ் வாக்குப்பிச்சைகேட்டு— பொத்துவில் தொகுதியில் வெற்றியீட்டிய கனகரத்தினம்— தேர்தல் முடிந்து இரண்டு திங்களுக்கிடையில் கூட்டணியின் கட்டுப்பாட்டை மீறி குத்துக்கரணம் அடித்திருக்கிறாரென்றால்—அவர் பொத்துவில் தொகுதியில் தமக்கு வாக்களித்த தமிழ் வாக்காளர்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளை மீறிவிட்டாரென்பதே அர்த்தமாகும்! வாக்களித்த மக்களை ஏமாற்றி விட்டாரென்பதே பொருளாகும்! பொத்துவில் தொகுதியில் 'பெரிய மனிதர்' என்றுமதிக்கப்பட்ட ஒருவரிடம் இப்படி 'சின்னத்தனமான' அரசியல் சிந்தனை புதைந்து கிடக்குமென்று யார் கண்டார்கள்?

பொத்துவில் தொகுதியில் ஐக்கிய தேசியக் கட்சியை புனரமைப்பு செய்தவர்களில் தாமும் ஒருவரெனக்கூறி சிங்கள ஆட்சியாளரை இப்போது 'தாஜா' செய்யும் கனகரத்தினம், உண்மையில் நேர்மையாளராக இருந்திடின், இதை முன்பே பகிரங்கமாக எடுத்துக் கூறி, "நான் யூ,என்.பி. ஆதரவாளன் எனவே; தமிழர்விடுதலைக்கூட்டணி டிக்கெட்டில் போட்டியிடமாட்டேன்' என்றன்றோ கூறியிருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தாரென்றால், ஐக்கிய தேசியக்கட்சியின் கொள்கைகளை நாம் ஆதரிக்காவிடினும், கனகரத்தினத்தின் அரசியல நேர்மையைப் பாராட்டியிருப்போம்!

ஆனால்; கண்ணையும், மூக்கையும், வாயையும் கைகளையும் வெளியே தெரியும்படியாக மனிதர்களுக்கு வைத்துள்ள இறைவன், உள்ளத்தை மட்டும் வெளியே தெரியாமல் உள்ளுக்குள்ளே வைத்துவிட்டானே; எனவேதான் உள்ளத்தால் யூ. என். பி.க்காரராகவும் வெளியே கூட்டணி ஆதரவாளராகவும் அரசியலில் கபட நாடகம் ஆடிய கனகரத்தினத்தின் சுய உருவத்தை தமிழர் விடுதலைக்கூட்டணித்தலைவர்களால் சரியாக எடைபோட முடியாமற் போய்விட்டது போலும்!

பொத்துவில் தொகுதியில் கனகரத்தினத்தின் வெற்றிக்காக இயக்கத்தைச்சேர்ந்த இளைஞர்கள் எத்தனைபேர் இரவு பகலாக, ஊணுறக்கமின்றி ஓடியாடி உழைத்து வெற்றி குவித்திருப்பார்கள்? சிங்கள இனவெறியர்களின் தாக்குதலும், இனக்கலவரமும், தமிழினத்தை மிகக் கொடூரமாக பாதித்த அந்தச் சூழ்நிலையிலும் கூட்டணிக்கு வாக்களித்து தமிழினத்தின் ஒற்றுமையையும், இலட்சிய உறுதிப்பாட்டையும் கட்டிக்காத்தனரே பொத்துவில் தொகுதியின் தன்மானச் செல்வங்கள்—அவர்களின் முகத்தில் தனது செயலால் இன்று கரிபூசிவிட்டார் கனகரத்தினம்!

நண்பா, ஐக்கியதேசியக்கட்சி எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறதோ—அப்போதெல்லாம் தமிழினம் பிளவுபடுத்தப்பட்டதையும், தமிழின விடுதலைப்போராட்டம் பலவீனப்படுத்தப்பட்டு, பின் தள்ளப்பட்டதையும் நான் முன்பும் உனக்கெழுதியிருக்கும் மடலிலே சுட்டிக்காட்டியிருக்கிறேன்—இப்போதும் ஐக்கியதேசியக்கட்சி ஆட்சியின்கீழ் அதே சூழ்ச்சியே கையாளப்படுகிறது!

ஆசைகாட்டுவது, அமைச்சர், அரை அமைச்சர் உட்பட பல்வேறு பதவிகளை அள்ளி வீசுவது, சலுகைகளை கொடுப்பது, புகழாரம் சூட்டுவது, போதையை யூட்டுவது, அச்சமூட்டுவது, மிரட்டுவது, ஏதாவது ஒரு பிரச்சினையில் மாட்டவைத்து பின்னர் 'பிளாக்மெயில்' பண்ணுவது—இப்படிப்பல்வேறு தந்திரங்களையும் சூழ்ச்சிகளையும் கையாண்டு அன்றுமுதல் இன்றுவரை தமிழினத்தின் விடுதலைப்போராட்டத்தை—தமிழ் மக்களின் ஒற்றுமையை —சிதறடித்திடுவதில் ஐக்கியதேசியக்கட்சி ஈடுபட்டுவருவதை நாம் அறிந்திடுவோம்!

நம்முன் நேரே நேரே மோதுகின்ற எதிரியை விட நண்பனைப்போலக் கட்டியணைத்து தோளில்

## அரசியல் மடல்

கைபோட்டு பழரசம் பருகக்கொடுத்து, அந்த மயக்கத்தில் இருந்திடும்போது, கழுத்தை நெரிக்கும் எதிரி பயங்கர மானவன்; ஆபத்தானவன்! இந்த இரண்டாவது எதிரியின் பாணியையே ஐக்கியதேசியக்கட்சி பின்பற்றிவருகிறது!

இன்றைய தினமும் தமிழ் இன ஒற்றுமையை முறியடித்திட ஐக்கியதேசியக்கட்சி அரசு இதே சூழ்ச்சி வலையையே விரித்துள்ளது! அதாவது —தமிழர்விடுதலைக்கூட்டணியிலுள்ள சில தலைவர்களை பாராட்டி அவர்களை முதுகில் தட்டிக்கொடுத்திடுவது; வேறு சிலரைக் கண்டிப்பது, இன்னும் சிலருக்கு வேறு ஆசைகளை ஊட்டுவது—இன்னோரன்ன தந்திரங்களைக் கையாண்டு, இயக்கத்தையும் இன ஒற்றுமையையும் பிளவுபடுத்த முயற்சிக்கிறது ஐக்கிய தேசியக்கட்சி அரசு!

**இதில் ஆகப்பெரிய சதித்திட்டம் என்னவென்றால்—தமிழ் ஈழத் தந்தை செல்வாவும், அமரர் வன்னியசிங்கமும் நாகநாதனும், இராசவரோதயமும், இராசமாணிக்கமும் கட்டியெழுப்பிய வடக்கு, கிழக்கு பிரதேச ஒற்றுமையை—தமிழ் ஈழ ஐக்கியத்தை ஒருமைப்பாட்டை — சிதறடித்திடுவது தான்! ஆம், இந்தப் பயங்கர சூழ்ச்சியிலேதான் ஐக்கிய தேசியக்கட்சி அரசும், அவர்களது, 'ஒண்ணே ஒண்ணு கண்ணே கண்ணு, என்று இருக்கும் தமிழ் அமைச்சர் தேவநாயகமும் தினசரியாரும் தினமும் ஈடுபட்டுள்ளனர்!**

கிழக்கு மாகாணத்துக்கும் வடக்குமாகாணத்துக்கும் இருக்கும் இனரீதியான தொடர்பை—அரசியல் ரீதியான தொடர்பை —ஐக்கியத்தை சிதறடித்துவிட்டால் கிழக்கு மாகாணத்தை சுலபத்தில் சிங்கள நாடாக்கி விடலாம் என்பதே ஆட்சியாளர் போட்டுள்ள சதித்திட்டமாகும்! கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்காக முதலைக்கண்ணீர் வடிப்பதும், அவர்களுக்கு உருகுவதுபோல நடிப்பதும், இந்தத்திட்டத்துடனேயே தவிர உண்மையில் கிழக்குமாகாணத் தமிழ் மக்கள் மீது ஏற்பட்டிருக்கும் காதலால் அல்ல என்பதை அரசியல் தெளிவு மிக்கோர் உணர்ந்திடுவர்!

உண்மையில் தமிழ்ஈழப் பிரதேசமாகிய வடக்கும், கிழக்கும் ஒருபோதும் இணையக் கூடாதென்பதே ஜே. ஆர். அவர்களின் நீண்ட நெடுங்காலத்து கொள்கையாகும்; பண்டா—செல்வா ஒப்பந்தத்தின் கீழ், ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சபைகள் தாம் விரும்பினால் ஒன்றுடன் ஒன்று இணைந்து ஒரே பிரதேச சபையாக இயங்கலாம் என்ற விதி அதில் இடம்பெற்ற காரணத்தினாலேயே தாம் அதை எதிர்த்ததாக ஜே. ஆர். அவர்கள் முன்பு விளக்கமளித்திருக்கிறார்! அதாவது, பண்டா—செல்வா ஒப்பந்தத்தின் கீழ், வடக்கும் கிழக்கும் அரசியல் ரீதியாக இணையக்கூடிய வாய்ப்பு இருந்ததனாலேயே அதை ஜே. ஆர். அன்று வேகமாக எதிர்த்திருக்கிறார் என்பது பின்பு அவரது வாயிலிருந்தே வெளிவந்த உண்மையாகும்! இன்றைக்கும், வடக்கையும், கிழக்கையும் பிரித்திடவே பாரிய சூழ்ச்சி நடைபெற்று வருகிறது. இந்தச் சூழ்ச்சிக்கு முதற்பலியாகியிருக்கிறார் பொத்துவில் கனகரத்தினம்!

இந்தச் சூழ்ச்சி ஒரு புறம்! மறுபுறம் இன்னோர் செய்தியையும் ஏடுகளில் பார்த்திருப்பாய்! கருத்துச் சுதந்திரம், பேச்சுச் சுதந்திரம், பத்திரிகைச் சுதந்திரம், மனிதஅடிப்படை உரிமைகள் சுதந்திரம், போன்ற சகல சுதந்திரங்களுக்கும் பாதுகாப்பு அளிப்பதாக கூறும் ஜே.ஆர். சிங்கப்பூரிலிருப்பதுபோல இங்கும் கடைந்தெடுத்த பாஸிஸசட்டம்ஒன்றைக் கொண்டு வரவிருக்கிறாராம். இதற்குபெயர் உள்ளூர் பாதுகாப்புச் சட்டமாம்! தமிழ்இனத்தின் சுதந்திரக் குரலை—தமிழ் ஈழ விடுதலைக் கோரிக்கையை நசுக்கிட சட்டம் வருகிறதாம்!

இச்சட்டத்தின் கீழ் தனிநாடு கோருவது அதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது, கிளர்ச்சி செய்வது தண்டனைக்குரிய குற்றம் ஆக்கப்படுமாம்! சுதந்திரம் கோரினால் அதற்கு தண்டனை என்ன தெரியுமா?

சிறைவாசம்,
சொத்துப்பறிமுதல்!
குடியியல் உரிமை பறிமுதல!
தொழிலுரிமை பறிமுதல் ......... இத்தியாதி இத்தியாதியாம்!

ஆம் நமது விடுதலை இயக்கம் ஒரு சோதனைக்கட்டத்தை நெருங்கிக் கொண்டிருக்கிறது. இக்கட்டத்தில் நின்றுபிடிப்பவர்களே உண்மையான விடுதலை வீரர்களாக விளங்கமுடியும்! இப்படியான சோதனைக்கட்டம் ஏற்படும்போது இயக்கத்தில் சுயநலத்துக்காகவும், சுகபோகங்களுக்காகவும் வந்து ஒட்டிக்கொண்டிருக்கும் சுயநலக் கும்பல்கள் சொல்லாமல் கொள்ளாமல் இயக்கத்திலிருந்து மெதுவாக கழன்று விடும்! தூய்மையும் இலட்சிய உறுதியும் படைத்தோரின் கோட்டமாக—பட்டை தீட்டப்பட்ட வைரமாக விடுதலை இயக்கம் உருவாகும்!

"கேட்டிலுமுண்டோர் உறுதி கிளைஞரை
நீட்டி அளப்பதோர் கோல்"

என்று வள்ளுவன் கூறியதுபோல உண்மையான இலட்சியவாதிகளை அடையாளம் கண்டு கொள்ள நமக்கு எதிராக ஏவி விடப்படும் அடக்கு முறைகளே உதவும்!

ஆம், இயக்கத்திலிருந்து கோழைகள் விலகட்டும்! முதுகெலும்பற்றோர் புறமுதுகு இடட்டும்; விலைபோகும் சரக்குகள் விலைபோகட்டும்! ஏமாற்றப்படுவோர் ஏமாற்றப்படட்டும்! ஆனால் இலட்சிய வீரர்கள்—தங்கள் புனித யாத்திரையை எப்படியும் நடத்தி இறுதியில் தங்கள் இலட்சியபுரியை — சமதர்மத் தமிழ் ஈழத்தை என்றோ ஓர் நாள் அடைந்தே தீருவார்கள்! ஆகவே நண்பா, கலங்காதிருப்போம்; உறங்காதிருப்போம்; ஓயாது தலைசாயாது இருப்போம் — உறுதிகுன்றாமல் பணிதொடருவோம்!

அன்புள்ள தோழன்

கோவை-மகேசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

# ஜே. ஆர். தயாரா?

பெரும்பாலான சோசலிச நாடுகளில் எல்லாம் அந்தந்த நாடுகளிலுள்ள தேசிய இனங்களுக்கு சுயநிர்ணய உரிமை வழங்கப்பட்டு, அச் சுயநிர்ணய உரிமையின் கீழ் ஒவ்வொரு தேசிய இனமும் தன்னைத்தானே ஆளவும், தமது பிரதேசத்தில் தாமே எஜமானர்களாகி, தமது மொழி, கலை, கலாச்சாரம், பொருளாதாரம் போன்றவற்றை பேணவும் வளர்க்கவும் உரிமைகள் வழங்கப்பட்டுள்ளன.

சோசலிச நாடுகளின் தாய் வீடாக விளங்கும் சோவியத் யூனியனில் விரும்பினால் பிரிந்துசெல்லும் உரிமை கூட தேசிய இனங்களுக்கு வழங்கப்பட்டுள்ளது; இந்த உரிமையைப் பயன்படுத்தி புரட்சியின் பின்னர் ஐந்து தேசிய இனங்கள் தனித்தனி நாடுகளாகப் பிரிந்து சென்றும் இருக்கின்றன.

வரவுசெலவுத்திட்ட இறுதி நாள் விவாதத்தின் போது மேற்கண்ட உண்மையை எதிர்க்கட்சி முதல்வர் தேசிய அரசுப் பேரவையில் சுட்டிக்காட்டியபோது, பிரதமர் ஜே. ஆர். குறுக்கிட்டு, "அந்த உரிமைகளை நான் தரமாட்டேன் என்று ஏன் நினைக்கிறீர்கள்? திருத்தியமைக்கப் படவிருக்கும் அரசியலமைப்பில் அந்த உரிமைகளை வழங்குவேன்" என்று கூறியிருக்கிறார்.

அதாவது—தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையையும் தாம் அங்கீகரிக்க இருப்பதாக தேசிய அரசுப்பேரவையில் பிரதமர் அறிவித்திருந்தார். பொறுப்புவாய்ந்த இடத்தில் பொறுப்பு வாய்ந்த ஒருவர் தந்திருக்கும் பொறுப்பு வாய்ந்த இந்த உறுதிமொழி நிச்சயம் வரவேற்கப்படவேண்டியதே!

தமிழ்த்தேசிய இனத்தின் சுயநிர்ணயஉரிமையை சிங்கள இனத்திலுள்ள இடதுசாரி சக்திகளும், வலதுசாரி சக்திகளும் ஏற்றுக்கொண்டு அங்கீகரிப்பார்களானால் முழுச் சிங்கள நாடும் அதை ஏற்றுக்கொண்டு விட்டது என்றே பொருள்படும். தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோட்பாடு சிங்களஇனத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு விடுமானால்—இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணும் ஒரு வழியும் பிறந்துவிடும்.

சிங்கள இடதுசாரி சக்திகள் மத்தியில் தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கைபற்றி இப்போது ஒரு சிந்தனைமாற்றம் ஏற்பட்டு வரும் இக்கால கட்டத்தில், சிங்கள வலதுசாரி சக்திகளின் தலைவர் எனக் கருதப்படும் பிரதமர் ஜே.ஆர். அவர்கள் தமிழ் இனத்தின சுயநிர்ணய உரிமையை தாமும் வழங்கப்போவதாக தேசிய அரசுப்பேரவையில் முதன்முதலாக அறிவித்திருந்ததைக் கண்டு அனைவரும் அதை வரவேற்றார்கள்!

ஆனால் தேசிய அரசுப்பேரவையில் பிரதமர், சுயநிர்ணய உரிமை பற்றிய தமது உறுதிமொழியை அளித்து வாய்மூடுவதற்கு முன்னர், நாளேடுகளில் சென்றவாரம் வெளிவந்திருக்கும் ஒரு செய்தி பிரதமரின் உறுதிமொழிக்கும் சுயநிர்ணயக் கோட்பாட்டுக்கும் விரோதமானதாக அமைந்திருக்கிறது.

அதாவது—தனிநாடு கோருவது, தனிநாடு அமைப்பதற்கான முயற்சிகளில் ஈடுபடுவது—கிளர்ச்சி செய்வது போன்றவற்றை தேசவிரோத செயல்களாக பிரகடனப் படுத்தி, அவற்றை தடைசெய்யவும், தண்டனைக்குரிய குற்றங்களாக்கவும் அரசாங்கம் விரைவில் சட்டம் கொண்டுவரவிருப்பதாகவும், அதற்கான நகல்மசோதா தயாரிக்கப்படுவதாகவும், பத்திரிகைச் செய்திகள் கூறுகின்றன.

இது உண்மையானால்—இவ்வாறு அரசாங்கம் செய்வது, தமிழ் தேசிய இனத்தின் ஜனநாயகக் குரலை நசுக்குவதாகவும், சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டுக்கு விரோதமானதாகவுமே கருதப்படும்! தமிழ்தேசியஇனத்தின் சுயநிர்ணய உரிமையை தாமும் அங்கீகரிக்கப்போவதாக பிரதமர் கூறியதில் அந்தரங்கசுத்தியும் அர்த்தமும் இருக்குமானால், இப்படியான பாஸிஸ சட்டத்தை அவசர அவசரமாக தயாரிப்பதற்கு வேண்டிய அவசியம் எதுவும் இல்லை!

1977 யூலைப்பொதுத்தேர்தலை தமிழ்த்தேசிய இனத்தார்—தமிழீழமக்கள்—ஒரு சர்வஜன வாக்கெடுப்பாகப் பிரகடனப் படுத்தி, அத்தேர்தலில் தங்கள் தீர்ப்பை ஜனநாயக ரீதியில் ஐயத்துக்கிடமின்றி வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதாவது தங்கள் இறைமையைப்பயன் படுத்தி. தமது இழந்த தமிழ்ஈழ அரசை மீள அமைப்பது என்று அவர்கள் முடிவுஎடுத்துள்ளார்கள் இந்த செயலை செய்து முடிப்பதற்கான கட்டளையை அவர்கள் தமிழர் விடுதலைக்கூட்டணியிடம் ஒப்படைத்திருக்கிறார்கள்.

இந்தத்தீர்ப்பில் ஆட்சியாளருக்கு ஏதாவது சந்தேகம் இருக்குமானால்—தமிழ் தேசிய இனத்தின் சுயநிர்ணய உரிமையை வழங்கப்போவதாக உறுதிமொழியளித்திருக்கும் ஜே. ஆர். அவர்கள், அந்த சுயநிர்ணய உரிமையின் அடிப்படையில் தமிழ்ஈழ மக்கள் மத்தியில் வேண்டுமானால் மீண்டும் ஒரு வாக்கெடுப்பை நடத்திப்பார்க்கட்டும்! தமிழ் ஈழமக்கள். ஒற்றையாட்சியின் கீழ் ஓர் அரசின் கீழ் வாழவிரும்புகிறார்களா? அல்லது சமஷ்டி அமைப்பின் கீழ் மாநில சுயாட்சிபெற்று வாழ விரும்புகிறார்களா? அல்லது பிரிந்துசென்று தமது இழந்த தமிழ் ஈழ அரசை மீள அமைத்து தனியாக வாழவிரும்புகிறார்களா? என்பதை இந்த வாக்கெடுப்பு மூலம் சிங்கள அரசாங்கமும் சிங்கள மக்களும் உலகமும் அறியட்டும்,

ஐ.நா.சபையின் பிரதிநிதியோ, அல்லது வேறு ஒரு நாட்டின் அல்லது நாடுகளின் பிரதிநிதிகளோ, இந்த வாக்கெடுப்புக்கு நடுநிலையாளர்களாக விளங்கட்டும் நடுநிலையாளர்களை வேண்டுமானால் ஜே, ஆர், அவர்களே தேர்ந்தெடுக்கட்டும்!

**இத்தகைய வாக்கெடுப்பொன்றில் தமிழ் ஈழ மக்கள் அளிக்கின்ற தீர்ப்பு எதுவானாலும், அதையே முடிவான தீர்ப்பாக ஏற்றுக் கொள்வது என்று பிரகடனப்படுத்தப்பட வேண்டும், அந்த முடிவுக்கு அனைவரும் கட்டுப்பட வேண்டும்.**

இதைச் செய்ய ஜே. ஆர். தயாரா?

இத்தகைய வாக்கெடுப்பு ஒன்றை நடத்தி, அதில் தமிழ் மக்கள் தனியே பிரிந்து செல்லும் கொள்கையை நிராகரித்து விட்டார்களானால்—அதன் பின்னர் அரசாங்கம் பிரிவினைத்தடைச் சட்டம்கொண்டு வருவதையாரும் குறை கூற மாட்டார்கள்!

ஆனால்—இன்று தமிழ்மக்களின் ஜனநாயகக் குரலை நெரிப்பதற்காக—ஒரு புறம் சுயநிர்ணய உரிமையை வழங்கப்போவதாக கூறிக்கொண்டு, மறுபுறம் அதே சுயநிர்ணய கோட்பாட்டை குழிதோண்டிப்புதைக்கும் சட்டங்களை கொண்டுவர நினைப்பது — கடைந்தெடுத்த பாஸிஸ நடவடிக்கையாகவே கருதப்படும்! விடுதலைப் போராட்டங்களை தடைச்சட்டங்களால் அடக்கிவிடமுடியாதென்பதை அனைவரும் உணரவேண்டும்!

இறுதியாக ஒன்று—தமிழ் தேசிய இனம் இன்று கேட்பது பிரிவினையல்ல; 1833ஆம் ஆண்டுவரை இருந்த அரசை—இழந்த அரசை மீள அமைக்கவே போராடுகிறது. தமிழ் ஈழத்தில் 1948முதல் தனது படைபட்டாளத்தை குவித்து ஆக்கிரமிப்பு ஆட்சிநடத்தும் சிங்கள ஏகாதிபத்தியம் இங்கிருந்து வெளியேற வேண்டும் என்பதே தமிழ் மக்களின் நிலைப்பாடாகும்!

தமிழ்ஈழமக்கள் இன்று மேற்கொண்டிருப்பது தமது நாட்டைச் சட்ட விரோதமாக ஆக்கிரமித்துக் கொண்டிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியத்தை இங்கிருந்து வெளியேற்றும் விடுதலைப் போராட்டமே தவிர பிரிவினைப் போராட்டம் அல்ல! இந்த உண்மையை எதிர்வரும் [illegible] உலக அரங்கின் முன் எடுத்துக் [illegible]

# திராவிட நாடு கோரிக்கை கைவிடப்பட்டதுபோல் 'தமிழ் ஈழம்' கோரிக்கையும் கைவிடப்படலாமா?

## டாக்டர் சாலை இளந்திரையனின் அபிப்பிராயம்!

தென்னகத்தில் அறிஞர் அண்ணா அவர்கள் திராவிட நாடு கோரிக்கையை கைவிட்டது போல, தமிழர் விடுதலைக்கூட்டணியும் தனிநாடு கோரிக்கையை கைவிட்டாலென்ன என்று ஆங்காங்கே கொள்கையுறுதியற்ற சிலர் முணுமுணுத்துவருகின்றனர். அண்ணா வழியைப பின்பற்றி நாவலர் அமிர்தலிங்கமும் தனிநாடு கோரிக்கையை கைவிட வேண்டும் என்று மலையகத்திலிருந்து புதிதாக முளைத்த ஏடொன்று இதோபதேசம் வேறு செய்திருந்தது. இந்தப் பத்திரிகைக்கு முனைவர் சாலைஇளந்திரையன் விடுத்துள்ள முடங்கல் இது:-

"அண்ணாவின் வழியை அமிர் பின்பற்றுவாரா?" என்று கேட்டு, தனித் தமிழ் நாடு கோரிக்கையைத் தமிழர் விடுதலைக் கூட்டணி கைவிட வேண்டும் என்று கோரியிருந்தீர்கள்.

அண்ணா திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்டதை உதாரணமாகக் காட்டி இருந்தீர்கள் அல்லவா? அதைப் பற்றி மட்டும் ஒரு வார்த்தை:

திராவிடநாடு கோரிக்கையைக் கைவிட்ட நாளிலிருந்தே இங்குள்ள திராவிட அரசியலின் முதுகெலும்பு முறிந்துவிட்டது;

நாம் எடுத்து முழக்கி நமது கட்சிக்கே அடித்தளமாக அமைத்த ஒரு கொள்கையைக் கைவிடும்போது, கட்சி கட்டுக்குலைந்து போகிறது; கட்சியில் திரட்டப்பட்ட மக்களுக்கு எந்த இலட்சியமும் இல்லாமல் போகிறது. அதன் காரணமாக, அந்தக் கட்சியே,—கொசுக்களை உற்பத்தி செய்யும் அழுக்குக் குட்டை போல்,—சாதிவெறி, குடும்ப வெறி, தனிமனித வழிபாடு என்னும் பெரிய நோய்களை உற்பத்தி செய்யத் தொடங்கிவிடுகிறது.

தமிழர் விடுதலைக் கூட்டணியார், துன்பங்களைக் கண்டு பயந்து தங்கள் இலட்சியத்தைக் கைவிடுவதானால்.—அதற்கு முன், தமிழகத் திராவிட இயக்கங்களின் அனுபவத்தை அவர்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். அப்படி ஒரு வீழ்ச்சி ஏற்படாமல் தடுப்பதற்குரிய சரியான மாற்றுவழி காணமல், தன்நிலையிலிருந்து பின்வாங்கும் எந்த இயக்கமும் (கட்சியும்) சீர்குலைந்தே போயிருக்கிறது என்பது தான் வரலாறு.

# திருமண அழைப்பு

திருவருளை முன்னிட்டு

| | |
|---|---|
| உரும்பராய் மேற்கு<br>இ. அருணாசலம்<br>தம்பதிகளின் புதல்வன்<br>அமிர்தலிங்கம்<br>அவர்களுக்கும் | அளவெட்டி வடக்கு<br>இளைப்பாறிய ஆசிரியர்<br>ச. அமிர்தலிங்கம்<br>தம்பதிகளின் புதல்வி<br>சோதிமணிக்கும் |

14-12- 1977 மாலை 3·55 — 4·56 வரையுள்ள நல்லோரையில் அளவெட்டி கும்பழாவிளைப் பிள்ளையார் கோவிலில் விவாக சோபனம் நடைபெறும். அன்பர்கள் அன்புடன் அழைக்கப் படுகின்றனர்.

## அரியாலையில் செல்வா ஞாபகார்த்த சிகிச்சை நிலையம்!

தமிழர் விடுதலைக்கூட்டணியின் தீவிர ஆதரவாளரும், தமிழ் மகளிர் பேரவையின் முக்கிய உறுப்பினருமான வைத்திய கலாநிதி செல்வி, தேவா அம்பலம் பிள்ளை மூதறிஞர் தந்தை செல்வாவின் நினைவாக "செல்வா ஞாபகார்த்த சிகிச்சை நிலையம்" என்ற பெயரில் வைத்தியநிலையம் ஒன்றை 104, புங்கன் குளம் வீதி, அரியாலையில் ஆரம்பித்துள்ளார். செல்வி தேவா, முன்பு செட்டிகுளத்தில் பிரபல வைத்தியராக விளங்கியவர்.

## சுதந்திரன்
## 13·12-77 இதழில்
## எதிர்பாருங்கள்!

* பாதிக்கப்பட்ட தமிழ் அகதிகளுக்கு நிவாரண நிதி வழங்குவதில் யாழ்ப்பாணம் உதவி அரசாங்க அதிபரின் அலுவலகத்தில் நடைபெறும் பாரபட்சம், தில்லுமுல்லுகள்.

* கிராம சேவகர் ஒருவரின் தில்லுமுல்லுகள்! பாதிக்கப்படாத சிங்களவருக்கு 'சிபார்சு' செய்யும் தமிழ் கிராமசேவகரின் 'அட்டூழியங்கள்! அட்டகாசங்கள்!!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'சிங்களம் மட்டும்' சட்டத்தை மாற்றமுடியாது!

## பாரம்பரியபிரதேசம்என்பதையும் நான் ஏற்றுக்கொள்ளமுடியாது"

### தேசிய அரசுப் பேரவையில் பிரதமர் ஜே. ஆர்.

சிங்களம் மட்டும் சட்டத்தை மாற்றியமைக்க தம்மால் முடியாதென்றும், தமிழர் விடுதலைக் கூட்டணியின (தமிழர்களின்) பாரம்பரிய பிரதேசங்கள் என்று கூறுவதையும் தான் ஏற்றுக் கொள்ளமுடியாதென்றும், காலஞ்சென்ற டி. எஸ். சேனநாயகாவின் காணிக் கொள்கையையே தமது அரசும் பின்பற்றும் என்றும் தேசிய அரசுப்பேரவையில் பிரதமர் ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்திருக்கிறார். 6-12-77ல் பாதுகாப்பு அமைச்சு செலவினமானியம் மீது பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார்.

திரு. ஜெயவர்த்தனவின் மேற்படி பேச்சை 7-12-77 'வீரகேசரி' 'தினபதி' ஆகிய நாளேடுகள் பிரசரித்துள்ளன. பிரதமர் ஜே. ஆர். தமதுபேச்சில் தெரிவித்துள்ள முக்கிய அம்சங்கள் வருமாறு:-

● சிங்களம் மட்டும் சட்டம் மாற்றியமைக்கப்படமாட்டாது.

● நீங்கள் (தமிழர் கூட்டணியினர்) பாரம்பரிய பிரதேசங்கள் என்று கூறுவதை ஏற்றுக்கொள்ள நான் தயாராக இல்லை. இனக்கலவரத்தின் காரணமாக வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு வந்தவர்கள் தமிழர்கள் என்ற காரணத்தினுலும், அவர்களுக்கு தமிழ் இரத்தம் ஓடுகிற காரணத்தினுலும் நீங்கள் அவர்களை அங்கு குடியேற்றும்படி கூறுகிறீர்கள். கலவரத்துக்கு முன்னர் அங்கிருக்காத அவர்கள் கலவரத்துக்குப் பின்னர் அங்கு வந்தால், அப்பகுதி அவர்களின் தாயகம் ஆகிவிடுமா? எப்படித் தாயகமாகும்?

● இந்த இலங்கை ஒரே நாடு; இந்த நாட்டைப் பிரிக்க நான் விடமாட்டேன்.

● தமிழ்ப் பகுதியில் தமிழரைத்தவிர வேறுபகுதி ஆட்களை குடியேற்றக்கூடாதென்று எதிர்க்கட்சியினர் கருதுகின்றனர்: குடியேற்றத்திட்டங்களில் அந்தந்தப் பகுதி மக்களுக்கே முதலுரிமை வழங்கப்படவேண்டும் என்ற டி. எஸ். சேனநாயகாவின் காணிக் கொள்கையையே நாம் தொடர்ந்து அமுல்செய்வோம். ஆனல் அவசியம்வேறு பகுதி ஆட்களையும் குடியேற்றவேண்டுமெனக் கருதினுல் அப்படிச் செய்யத் தயங்கமாட்டோம். பூகோள ரீதியில் தமிழ்ப்பகுதி, சிங்களப்பகுதி யென்று பார்த்து காரியமாற்றமுடியாது"

## 'எல்லாளன்' வயோதிபர்! அமிர் அப்படியல்ல!

இச்சபையில் தங்களைத் தாங்களே துட்டகைமுனுக்களாக நினைத்துக் கொண்டிருப்பவர்களுக்கு ஒன்றைக் கூறிவைக்க விரும்புகிறேன். எமது தலைவர் 'எல்லாளனைப்' போல வயோதிபர் அல்லர்; இப்படியான பயமுறுத்தல்களுக்கு நாம் பணியமாட்டோம்!

— வரவு செலவுத்திட்ட விவாதத்தின் போது நல்லூர் பா. உ. எம். சிவசிதம்பரம்

## 'தூண்டிவிடும்'பேச்சுஎன்பதற்கு வியாக்கியானம் கூற முடியுமா?

### இரத்தினசாரதேரோவிடம் ஈழவேந்தன் கேள்வி!

"தமிழ்த் தலைவர்கள் 'தூண்டிவிடக்கூடிய' பேச்சுக்களை நிகழ்த்துவதை தவிர்க்க வேண்டும் என்று கூறுகிறீர்களே— 'தூண்டிவிடக் கூடிய பேச்சுக்கள்' என்பதற்கு நீங்கள் தரும் வியாக்கியானம் என்ன? தமிழன் தன்னைத் தானே ஆளவேண்டுமென்று கூறுவது தூண்டிவிடக்கூடிய பேச்சு என்று நீங்கள் கூறினுல் நாம் அதை ஏற்கமுடியாது.''

— மேற்கண்டவாறு யாழ் வளாகத்தில் இடம்பெற்ற 'வடக்கு கிழக்கு' அபிவிருத்தி பற்றிய கருத்தரங்கில் கருத்துரை வழங்கிய தமிழர் விடுதலைக்கூட்டணி கொழும்புக்கிளை தலைவர் திரு. ஈழவேந்தன், வண இரத்தினசார தேரோவைப் பார்த்துக்கேட்டார்.

இக்கருத்தரங்கு 26, 27-11-77ல் நடைபெற்றது. இக்கருத்தரங்குக்கு முன்னுள் நீதியரசர் திரு. மாணிக்கவாசகர் தலைமை தாங்கினுர். இக்கருத்தரங்கில், வண. இரத்தினசார தேரோ, குருநாகல் பிஷப் விக்கிரமசிங்கா, திரு. விக்னராஜா, முன்னுள் இலங்கை வங்கி முகாமையார் திரு. சி. லோகநாதன், திரு. சி. கதிரவேற்பிள்ளை, டாக்டர் நீலன் திருச்செல்வம், உட்பட பலர் கருத்துரை வழங்கினர்.

## தேசிய அரசுப் பேரவையில் நவம்....

—6-ம் பக்கத் தொடர்ச்சி

காரத்தோடு அந்தக் கோரிக்கையை நிராகரித்தார்கள். நிராகரித்துக்கொண்டு வருகிருர்கள் அதன் விளைவுகள் என்ன என்று நான் உங்களுக்குக் கூறத் தேவையில்லை. சமீப காலத்திலே நடந்துகொண்டிருக்கும் நிகழ்ச்சிகள் அதை உறுதிப்படுத்தும்.

செக்கோசிலவக்கியா நீண்ட காலம் ஒற்றையாட்சியில் இருந்துவரும் நாடு. அந்த நாட்டிலே ஸ்லாவிய இனம் வேறு, ஸெக் இனம் வேறு என்ற பிரச்சினை எழுப்பப்பட்டது. ஆரம்பத்தில் இந்தப் பிரச்சினையை முறியடிக்கவேண்டும் என்று பலர் கருதிய போதிலும் அந்த நாட்டிலே பொறுப்பாக இருந்தவர்கள், நாட்டின் ஒற்றுமையைக் குலைக்கக் கூடாது. செக்கோசிலவக்கிய மக்கள் அத்தனை பேரும ஒரு மக்களாக இருக்க வேண்டும் என்ற அடிப்படையில் சிந்தித்தபடியால் ஸ்லாவிய மக்கள் புறம்பான இனம், ஸெக் மக்கள் புறம்பான இனம், ஆனுல் செக்கோசிலவக்கியா ஒரு நாடு என்ர அடிப்படையில் இப்பொழுது இயங்கிவருகின்றுர்கள். ரஷ்யாவில் பல இனங்கள் இருக்கின்றன என்பதை அந்த நாட்டின் அரசியல் அமைப்பு ஏற்றுக்கொள்கின்றது. அந்த அடிப்படையில்தான் அங்கு ஒற்றுமை வளர்ந்து கொண்டு வருகின்றது என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும்.

உலகத்திலுள்ள மற்ற நாடுகளிலே, ஆங்கிலேய நாடு—பிரித்தானிய நாடு— அரசியல் பிரச்சினைகளை எப்படித் தீர்த்துவைத்தாலும் பரவாயில்லை. தங்கள் நாட்டிலே ஒற்றையாட்சிதான் இருக்கும் என்ற நோக்கத்தோடு நீண்டகாலமாக இயங்கி வந்தது. ஆனுல் சமீப காலத்திலே வேல்ஸ் மக்களும் ஸ்கொட்டிஷ் மக்களும் தங்கள் தனித்துவத்தை நிலைநாட்ட முன்வந்தபோது எவ்வளவு பொறுப்புணர்ச்சியோடு, தொடர்ந்தும் பிரித்தானிய நாடு ஒரு நாடாக இருக்க வேண்டும், அந்த நாட்டு மக்கள் அத்தனைபேரும் ஒரு நாட்டு மக்களாக இருக்க வேண்டும் என்ற கருத்தோடு இப்பொழுது அதிகாரத்தைப் பகிர்ந்து கொடுக்கும் ஒரு புதிய திட்டத்தை அந்த நாட்டிலே அமைத்திருப்பதை உங்களிற் பலர் அறிவார்கள். Devolution cf governmental authority.

ஒரு நாட்டை ஆளுகின்றவர்கள் யார் என்று அறிய வேண்டுமென்றுல் அந்த நாட்டிலே எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கின்றது என்று பார்; எந்த மொழி ஆட்சி மொழியாக இருக்கின்றதோ அந்த மொழியைப் பேசுகின்றவர்கள் தாம் அந்த நாட்டை ஆளுகின்றவர்கள் என்று அரசியல் ஞானிகள் கூறுகிருர்கள். இந்த நாட்டின் அரசியல் அமைப்பைப் பார்த்து இந்த நாட்டிலே உள்ள அத்தனைபேரும் இந்த நாட்டு மன்னர்கள் என்று கூறமுடியுமா? இந்த நாட்டிலே வாழுகின்ற அத்தனை பேரையும் இந்நாட்டு மன்னர்கள் என்று கருதவேண்டும் என்பதுதான் உங்களுடைய கருத்து என்றுல் அதற்கு ஏற்றவகையில் தகுந்த மாற்றத்தைக் கொண்டுவாருங்கள்.

நான் முன்பு கூறியபடி தமிழ் மக்கள் எங்களுக்கு அளித்த உத்தரவாதத்தை நீங்கள் செய்ய முடியும் என்று நாங்கள் கூற முடியாது. அது எங்களுக்குத் தந்த உத்தரவாதம். அதை நாங்கள் எங்கள் சக்திக்கு உட்பட்ட அளவிலே செய்து முடிக்க முயற்சிப்போம்.

இந்த நாடு, ஒரு நாடாக இருக்கவேண்டும் என்ற நல்லெண்ணம் உள்ள அனைவரும் தமிழ் மக்களின் அபிலாசைகளுக்கு மதிப்புக் கொடுத்து—தமிழ் மக்களின் முக்கியமான இரண்டு தத்துவங்களை ஏற்று இந்த நாட்டிலே வாழுகின்ற அந்த இனத்துக்கு அதனது பிறப்புரிமைகளை நிர்ணயிக்கின்ற உரிமை இருக்கிறது என்பதை ஏற்று, இப் பிரச்சினைகளை ஆராயவேண்டும் என்று கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

எமது கட்சியின் சார்பிலே பேசுகின்றவர்கள், தமது கருத்துக்களைத் தெரிவிக்கின்றபொழுது, ஒருசிலர் அரசியல் கருத்துக்களைத் தெரிவிப்பார்கள்; ஒரு சிலர் வரவுசெலவுத்திட்டத்தின் பல அம்சங்களையும் பற்றி குறிப்பிடுவார்கள். எல்லோரும் ஒரே பேச்சை, ஒரே கருத்தைத் தெரிவிக்கவேண்டுமென்ற அடிப்படையிலே நாங்கள் இந்த விவாதத்திலே பங்குகொள்ளவில்லை. எங்கள் கௌரவ உள்ளூராட்சி அமைச்சரவர்கள் பேசுகின்றபொழுது, எனது நண்பர்களான திருகோணமலைப் பிரதிநிதியும் மன்னுர்ப் பிரதிநிதியும் தெரிவித்த கருத்துக்கள் மிகச் சிறந்தவை என்று கூறினுர். அவர்கள் தங்கள் பேச்சுக்களிலே ஒன்றைமட்டும் மிகவும் திட்டவட்டமாகச் சுட்[illegible]. எங்களைப் பொறுத்தவரையிலே—தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களைப் பொறுத்தவரையிலே— கொள்கைக் குழப்பம் எங்களிடத்தில் இல்லை. தமிழ் மக்கள் எங்களுக்கு அளித்த அரசியல் உத்தரவாதம் என்ன என்பது எங்களுக்கு நன்கு விளங்கும்.

இந்நாட்டின் அபிவிருத்திக்காகக் கொண்டுவரப்படுகின்ற எல்லாத் திட்டங்களுக்கும் எங்கள் பூரண ஒத்துழைப்பைத் தருவோம் என்று கூறுகின்றபொழுது, எங்களுடைய அரசியல் அடிப்படைத் தத்துவத்திலே—எங்கள் கருத்துக்களிலே மனக்குழப்பம் இருக்கிறது என்று நீங்கள் கருத வேண்டாம்.


துரித சலவைக்கு கூடுதல் நீலம் கலந்து தயாரிக்கப்பட்ட

''மில்க்வைற் சலவைப் பவுடர்''

வாங்கி உபயோகியுங்கள்
கூடுதல் பயன் பெற சிறிது நேரம் துணிகளை ஊறவிடுங்கள்

—ஓர் மில்க்வைற் தயாரிப்பு






பாவியுங்கள்

ரேயல் நீலத்தினைத் தயாரித்து விற்பனை செய்யும் சிவா இன்டஸ்ரீஸாரின் மற்றுமோர் தயாரிப்பு

ரேயல் ஜெலி கிறிஸ்டல்

மற்றும் ஏனைய தயாரிப்புகள்

ரேயல் பேக்கிங்பவுடர்
ரேயல் கஸ்டட் பவுடர்
ரேயல் கோண் பிளவர்
ரேயல் பிஸ் மக்ஸ்
ரேயல் நீலம்

தயாரித்து விற்பனை செய்வோர்

சிவா இன்டஸ்றீஸ்

112 1/3 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேசிய அரசுப் பேரவையில் நவம் விளக்கம்

## இரண்டு தேசிய இனங்கள் இங்த சேர்ந்து வாழ முடியுமா? முடியாதா? இதுவே இலங்கை எதிர்நோக்கும் பிரச்சினை!



"இந்த நாட்டிலேயுள்ள பிரச்சினை — சிறுபான்மை பெரும்பான்மை பிரச்சினை அல்ல; அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்படும் பிரச்சினையும் அல்ல; இரண்டு தேசிய இனங்கள் ஒன்ருக சேர்ந்து வாழமுடியுமா? வாழ முடியாதா? வாழ முடியாவிடின் அதற்கு மாற்று வழியென்ன? இதுவே தீர்வு காணப்படவேண்டிய பிரச்சினையாகும்"

இவ்வாறு 1-12-1977ல் தேசிய அரசுப் பேரவையில் உரையாற்றிய சாவகச்சேரி பா. உ. திரு. வி. என். நவரத்தினம் குறிப்பிட்டார். அவர் மேலும்பேசியதாவது;

பலர் பல விதமாக, தமிழ் ஈழத்தைப்பற்றி, தமிழ்ஈழக் கோரிக்கையைப் பற்றி தங்கள் கருத்துக்களைத்தெரிவித்தார்கள். இந்த நேரத்திலே தமிழ்மக்களுடையபிரச்சினைகளை நல்லெண்ணத்தோடுதீர்க்க வேண்டுமென்ற கருத்து இந்த நாட்டிலே இருக்கும் அத்தனை பேருக்கும் இருக்கிறது என்பதை நான் மறுக்கவில்லை. அமைச்சர்கள் மட்டுமல்ல, இந்தச் சபையிலே இருக்கும், ஏனைய அங்கத்தவர்கள் — புதிய அங்கத்தவர்கள் உட்பட — அத்தனை பேரும் இனத் துவேஷம் இல்லாத அடிப்படையிலே சிந்திக்கின்ருர்கள் என்பதை நாம் அறிந்து கொள்ளக்கூடியதாக இருக்கிறது,

இருந்தபோதிலும் ஒரு பிரச்சினையைத் தீர்ப்பதானல், அந்தப் பிரச்சினையின் ஆழத்தைப் பற்றி, அந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் பற்றி நன்ருக உணர்ந்தபின்தான் அந்தப் பிரச்சினையைத் தீர்க்க முயற்சிக்கலாம், ஒரு வைத்தியன் ஒரு நோயாளிக்குச் சிகிச்சை செய்யுமுன் அந்த நோயின் காரணத்தை அறிய வேண்டும். அப்படியல்லாமல் அந்த நோய்க்குச் சிகிச்சை பண்ண முடியாது.

இந்த அரசாங்கத்தைப் பொறுத்த அளவில். இந்த அரசாங்கத்தை ஆதரித்த மக்கள் என்ன அரசியல் தத்துவத்தின் அடிப்படையில் ஆதரவு கொடுத்தார்களோ அந்த தத்துவத்துக்கு உட்பட்டுத்தான் அரசாங்கம் நடக்கலாம் என்பதை நாங்கள் மறுக்கவில்லை. அதே நேரத்திலே, இந்தநாட்டிலேயிருக்கின்ற ஓர் இன மக்கள் தங்கள் அரசியல் கருத்துக்களை மிகவும் தெளிவாகச் சென்ற பொதுத் தேர்தலில் காட்டியிருக்கிருர்கள். தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்களுக்கு மக்கள் கொடுத்த உத்தரவாதம் என்ன? அந்த உத்தரவாதத்தின் பெறுமதி என்ன? அதன் ஆழம் என்ன? உணர்ச்சிவசப்படாமல்-- ஆத்திரம் கொள்ளாமல்—நல்ல முறையிலே மிக ஆழமாக இவற்றைச் சிந்திப்பது இச்சபையிலே உள்ள ஒவ்வோர் அங்கத்தவரதும் தலையாய கடமையாகும்.

தமிழ் பேசும் மக்கள் தமிழ் ஈழம் பற்றிச் சிந்திப்பதற்குக் காரணம் என்ன என்பதை இங்கு இருக்கின்ற புதிய கௌரவ அங்கத்தவர்களுக்கு நான் எடுத்துக்கூற விரும்புகிறேன்.

காலஞ்சென்ற திருவாளர் எஸ். டப்ளியு. ஆர். டி. பண்டாரநாயக்கா 1956ம ஆண்டு இந்நாட்டின் தலைவராக வந்தபிறகு இச்சபையிலே ஒரு மசோதா சமர்ப்பிக்கப்பட்டது. ஆங்கிலத்தை ஆளும் மொழியென்ற நிலையிலிருந்து அகற்றிஅதன் இடத்திற்குச் சிங்களத்தைக் கொண்டுவருகின்ற மசோதாதான் அது. அந்த நேரத்திலே எதிர்க்கட்சியிலேயிருந்த நாங்களும் இன்னும் பலரும் மொழி அடிப்படையைவைத்து-மனிதனின் அடிப்படை உரிமையை வைத்து — இந்த மசோதாவை ஆராய்ந்தோம். எந்த விதமான புதிய அரசியல் கருத்துக்களையோ புதிய அரசியல் சித்தாந்தத்தையோ இக்கௌரவ சபையிலே அங்கம் வகித்த தமிழரசுக்கட்சியின் சார்பிலோ— தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் சார்பிலோ நாம் அன்று கூறவில்லை. ஆனல், அந்த நேரத்தில் ஒரு முக்கியமான எதிர்க்கட்சியின் உறுப்பினர்களாக நாம் இருந்தோம்; அப்பொழுது வெள்ளவத்தை கல்கிசை பிரதிநிதியாக இருந்தவரும்,பின்னர்சென்ற பாராளுமன்றத்திலே அரசியலமைப்பு அலுவல்கள் அமைச்சராக இருந்தவருமான கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் பண்டாரநாயக்கா அவர்களைப் பார்த்துக்கூறியதை இங்கு உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன.

கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா அவர்கள் திருவாளர் பண்டாரநாயக்காவைப் பார்த்துக் கூறுகிருர், "பண்டாரநாயக்காவே தனிச் சிங்களத்தை இந்நாட்டின் ஆட்சிமொழியாகக் கொண்டுவருவதனுலே நீ சிங்கள மக்களுக்கு நன்மை செய்கிருய் என்று கருதாதே; தமிழ் மக்களுக்கு மட்டும் தான் தீமை செய்கிருய் என்றும் கருதாதே; இந்த மசோதா சட்டமானுல் அதன் விளைவை நீ நன்ருகச் சிந்தித்துப்பார்க்கவேண்டும் பல நாடுகளிலே உள்ள பல இன மக்கள் நடத்திய சுதந்திரப்போராட்டங்களைக் கவனித்துக்கொள்; எந்த நாட்டிலும் ஓர் இன மக்களின் மொழி உரிமை மறுக்கப்படுகின்ற நேரத்திலே அந்நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற புதிய சிந்தனையை நீ மறந்துவிடக்கூடாது; நான் எச்சரிக்கை செய்கிறேன்" என்று "ஒரு மொழி இரண்டு நாடு, இரு மொழிகள் ஒரு நாடு" என்று எச்சரிக்கை செய்கிருர் கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா. திருவாளர் கொல்வின்தொடர்ந்து கூறுவதை நாம் கவனிப்போம்; "ஐரேப்பியர்கள் இந்த நாட்டை ஆளுவதற்கு முன்னர் இந்நாட்டிலேபலஇராச்சியங்கள் இருந்தன என நீ மறந்துவிடாதே" என்று அவர் கூறுகிருர்.

"தமிழ் மக்கள் இந்த நாட்டின் மீது அவர்களுக்கிருந்த பற்றின் காரணமாக இந்த நாடு ஓர் அமைப்பிலே ஒரு நாடாக இருக்க வேண்டும் என்று கருதிய காரணத்தினுலே, தாங்களே தங்களை ஒரு காலத்தில் ஆண்டவர்கள் என்பதை மறந்து, எங்களோடு ஒத்து இது ஒரு நாடு நாம் அத்தனை பேரும் ஒரு நாட்டு மக்கள் என்ற அடிப்படையிலே இயங்கி வருகின்ருர்கள். அந்தச் சிந்தனையை மாற்றி அமைக்காதே" என்று கலாநிதி கொல்வின் ஆர். டி. சில்வா எச்சரிக்கை விடுத்தார்.

இதை ஏன் கூறுகின்றேன் என்ருல் என்ன காரணத்துக்காக தமிழ் பேசும் மக்கள் இந்தப் புதிய முறையில் சிந்திக்கத் தொடங்கினுர்கள் என்பதை எடுத்துக் கூறுவதற்காகவே 1947 ஆம் ஆண்டிற்குப் பிறகு நடந்த பல நிகழ்ச்சிகள் இந்த வகையில் சிந்திக்கத் தமிழ்மக்களை வற்புறுத்தி தள்ளி இருக்கின்றன என்பதை நாம் மனதில் வைத்திருக்க வேண்டும்.

இந்த அடிப்படையிலே தான் இப்பொழுது இந்த நாட்டிலே இருக்கின்ற பிரச்சினை என்ன என்பதை கொஞ்சம் ஆழமாக உணர்ந்து கொள்ள வேண்டும்

இந்த நாட்டிலே இப்போது சிறுபான்மை பெரும்பான்மைப் பிரச்சினை இல்லை. இந்த நாட்டிலே இப்பொழுது அடிப்படை மனித உரிமைகள மறுக்கப்படும் பிரச்சினைகள் இல்லை,

சென்ற வருடம் நடைபெற்ற ஒரு பெரிய கருத்தரங்கிலே எமது நாட்டின் பிரச்சினைகளை பற்றிப்பேசிய ஒரு முக்கிய வெளிநாட்டு அரசியல்வாதி கூறினுர். "இலங்கையில் சிறுபான்மைப் பெரும்பான்மைப் பிரச்சினை இல்லை. இலங்கையிலே மனித உரிமைகள் மறுக்கப்படும் பிரச்சினை இல்லை. இலங்கையில் இருக்கும் ஒரே ஒரு பிரச்சினை இரண்டு இனங்கள் ஒரு நாட்டிலே சேர்ந்து வாழ முடியுமா முடியாதா? என்ற ஒரே ஒரு பிரச்சினைதான் இருக்கிறது" என்பதாக; இந்த அடிப்படையில்தான் இந்தப் பிரச்சினைகளுக்கு நல்ல ஒரு முடிவு காண நாங்கள் அத்தனை பேரும் கடமைப்பட்டிருக்கிருேம்.

தமிழ் பேசும் மக்கள் சென்ற தேர்தலில் எமக்குத் தந்த உத்தரவாதத்தை நீங்கள் செய்து முடிக்க வேண்டுமென்று அவர்களும் எதிர்பார்க்கவில்லை. உங்களுடைய அரசியல் கொள்கைக்கு அப்பாற்பட்டது அந்த உத்தரவாதம், ஆனுல் தமிழ் மக்களுடையஅபிலாசைகளையும் அரசியல்கருத்துகளையும் நன்ருக ஆராய்ந்து இதற்கு ஒரு நல்ல முடிவுஎடுக்க முடியுமா என்று முயற்சி எடுப்பது உங்கள் கடமையாக இருக்கிறது.

ஒவ்வொரு இனத்துக்கும் தம்மைப் பற்றி நிர்ணயிக்கிற உரிமையிருக்கிறது என்பதை எவருமே மறுக்க முடியாது. தத்துவ ரீதியாக இந்த நாட்டிலே இருக்கிற அத்தனை அரசாங்கக் கட்சிகளும் ஏற்றுக்கொண்ட அரசியல் தத்துவம் இது. சமீப காலத்தில் ஐக்கிய நாடுகள் சபையிலே இந்தத் தத்துவ அடிப்படையிலே எத்தனையோ தீர்மானங்களை நிறைவேற்றுவதில் இலங்கையின் தூதுகோஷ்டி பங்கு பற்றியிருக்கிறது. ஓர் இனம் என்பது பற்றியும் இலக்கணம் இருக்கிறது. அதற்கு நாம் புதிய கருத்துக்கள் தெரிவிக்கவேண்டிய அவசியமில்லை. இந்த அடிப்படையில் ஒரு தேசிய இனம் அதனுடைய அரசியல் நிலைமை பற்றித் திட்டவட்டமாகத் தீர்மானிப்பதற்கு அதிகாரம் இருக்கிறது என்ற தத்துவத்தின் அடிப்படையிலே நல்ல எண்ணத்தோடு இந்தப் பிரச்சினையை ஆராய வேண்டும், நாட்டுக்குப் பொறுப்பாக இருப்பவர்கள்.

கௌரவ பிரதமர் அவர்கள் இந்தச் சபையிலே முன் பொருமுறை விடுத்த கருத்தொன்று பலருக்குச் சந்தேகத்தைக் கொடுத்தாலும் அந்தக் கருத்தை நான் ஏற்றுக்கொள்கிறேன். தமிழ் மக்கள் இந்த நாட்டிலே சமாதானத்தை விரும்பினுல் நாங்களும் சமாதானமாக இருக்கத் தயாராக இருக்கிருேம். போரை விரும்பினுல் அதற்கும் தயாராக இருக்கிருேம் என்று அவர் கூறினுர்; "இது என்னுடைய கருத்து அல்ல, சிங்கள மக்களுடைய கருத்து என்றும் கூறினுர். இந்த முறையிலே அவர் சிங்கள மக்களும் தமிழ் மக்களும் புறம்பான இனம் என்பதைத் தத்துவ அடிப்படையில் ஏற்றுக்கொண்டதையிட்டுச் சந்தோஷப்படுகிறேன்.

கிழக்குப் பாகிஸ்தானில் இருந்த மக்கள் ஆரம்பத்தில் தனிநாடு கோரவில்லை. அவர்கள் அந்த நாட்டிலே சுயமரியாதையோடு ஒரு புறம்பான இனம் என்று மதிக்கப்படவேண்டுமென்று விரும்பினுர்கள். மேற்குப் பாகிஸ்தானிலே இருந்து நாட்டை ஆண்டவர்கள் அகங்காரத்தோடு, இந்தப் பிரச்சினையின் முக்கியத்துவத்தைப் பொருட்படுத்தாத காரணத்தால் ஆளும் தங்களுக்குப் படை பலம் இருக்கின்றது. படை பலத்தைக் கொண்டு உரிமைக்காகப் போராடுகிறவர்களை நசுக்க முடியும் என்ற அகங்காரத்துடன் நடந்தபடியால் எத்தனையோ கோடிக்கணக்கான மக்கள் உயிரிழந்து, பங்களாதேஷ் உலகப் படத்திலே இடம் பெற்றதை நாம் அறிவோம்.

நமிபியாவில் இருக்கும் மக்கள், தாங்கள் ஒரு புறம்பான இனம், தங்களுக்குத் தனித்துவம் வேண்டும் என்று கூறிய நேரத்தில் தென்னுபிரிக்காவில் ஆட்சி பீடத்தில் இருக்கின்றவர்கள் தாங்கள் அதிகாரத்தில் இருக்கின்ருேம் என்ற அகங்

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




சரோஜினி
யாழ்ப்பாணம்.

கே: தினசரியார் நாள்தோறும் சுதந்திரன் ஆசிரியரையும் கூட்டணியையும் வைது தீர்க்கிறரே, நீங்கள் ஏன் மௌனம் சாதிக்கிறீர்கள்?

ப: நாய் மனிதனைப் பார்த்துக் குரைக்கும்போது, மனிதன் திரும்பி நாயைப் பார்த்துக் குரைத்துக்கொண்டிருப்பதில்லை. நாய்களும் நரிகளும் நன்ருக ஊளையிட்டுக் கொண்டிருக்கட்டும்! ஒட்டகம் தனது இலட்சியப் பாதையில் சென்று கொண்டேயிருக்கும்!

கே: தினசரியாருக்கு என்ன பட்டம் சூட்டலாம்?

ப: ஈழத்து "கோயபல்ஸ்" என்ற பட்டத்தை சூட்டலாம். ஒரே பொய்யைத் திருப்பித் திருப்பிக் கூறுவதன் மூலம் அதை உண்மையாக்க முயன்றவன் கோயபெல்ஸ். அவன் இறந்துவிடவில்லை. இங்கே தினசரியாராக பிறந்திருக்கிருன்!

ஃ

கந்தையா பரமநாதன்,
திருகோணமலை.

கே: பேரவையில் ஒரு சிங்கள எம். பி. கூறினுர்— நீங்கள் எல்லாளன்போல் மாறினுல் நாங்கள் துட்டகைமுனுபோல் மாறுவோம் என்று, இதன் உள் அர்த்தம் என்ன?

ப: மாவீரன் எல்லாளனை துட்டகைமுனு தோற்கடித்தது நேர்மையான முறையில் அல்ல; சூழ்ச்சியாலேயே வெற்றிகொண்டான். அதேபோன்ற சூழ்ச்சிகளால் உங்கள் விடுதலைப் போராட்டத்தை முறியடிப்போம் என்பதே அதன் அர்த்தமாக இருக்கும். இந்த சூழ்ச்சியின் முதற்படிதான் பொத்துவில் கனகரத்தினம் அடித்த குத்துக்கரணம்!

ஃ

இ. புவனேஸ்வரன்
வரிக்காடு
வல்வெட்டித்துறை.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணி பா. உ.க்கள் சரியானபாதையில் செல்கின்றனரா? மந்திரிகளின் விருந்துகளில் கலந்து கொள்கிறார்களே...?

ப: கூட்டணி பா. உ.க்கள் விருந்தில் கலந்துகொள்ளலாமா கூடாதா என்பது விருந்தின் பயனைப் பொறுத்த விடயம்; விருந்து என்ற சாட்டில் கொள்கைப் பிரசாரத்துக்கு வழி பிறக்குமானுல், அத்தகைய விருந்தில் கலந்துகொள்ளத்தான் வேண்டும். அதே சமயம் வெறும் கேளிக்கை தமாஷாக்களின் அடிப்படையில் அமைச்சர்களுக்கு நடைபெறும் விருந்துகளை புறக்கணிக்கலாம். உதாரணமாக வெளிநாட்டு இராஜதந்திரிகள், ஸ்தானிகர்கள், கலந்துகொள்ளும் ஒரு விருந்துக்கு எதிர்க்கட்சித்தலைவருக்கும் அழைப்புக் கிடைக்குமானுல் அந்த அழைப்பை ஏற்று அவர் அதில் கலந்து கொள்வது அவசியம். அப்படிக் கலந்துகொள்ளும் போது வெளிநாட்டுத்தலைவர்களைச் சந்திக்கவும் நட்பு அடிப்படையில் தமிழ் ஈழப் பிரச்சினையை அவர்களுக்கு எடுத்துக்கூறி அவர்களின் ஆதரவைத் திரட்டவும் வாய்ப்பு ஏற்படும். இத்தகைய சந்தர்ப்பங்களில் விருந்தை விட, விருந்து தரும் வாய்ப்பையே நாம் கருத்திற்கொள்ள வேண்டும்.

கே: எமது கூட்டணி பா. உ இராஜலிங்கத்தைப் பற்றி ஓரிரு வார்த்தைகள் கூறுங்கள்!

ப: தமிழ் ஈழத்தின் கல்வியமைச்சராக திகழவேண்டியவர்.

ஃ

சுப்பிரமணியம்,
கொழும்பு-6.

கே: பொத்துவில் கனகரத்தினத்தைப் புகழ்ந்துதள்ளினீரே — இப்போது என்ன கூறுகிறீர்?

ப: "தலையினிழிந்தமயிரனையர் மாந்தர் — நிலையினிழிந்தக் கடை!"

ஃ

கே. ஏ. சோதிநாதன்,
பசறை.

கே: கூட்டணிக்குள் பாராளுமன்ற உறுப்பினர்கள் தன்னிச்சையாக செயல்படுகிருர்களே! இதற்கு என்னசெய்யலாம்?

ப: கூட்டணிக்குள் ஒழுங்கும் கட்டுப்பாடும் போதிய அளவு இல்லையென்றும் ஏதோ ஒரு இடத்திலிருந்து கட்டுப்பாடு புகுத்தப்பட வேண்டுமென்றும் நாம் ஏற்கெனவே வலியுறுத்திவருகிறேம். கட்டுப்பாடும்ஒழுங்கும் முறையாக பின்பற்றப்படுமானுல், தன்னிச்சையாக செயல்படும் தன்மை நீங்கிவிடும். கட்சிக் கட்டுப்பாட்டை கட்டி காப்பது எப்படி என்பதை ஜே.ஆர். ரிடமிருந்து கூட்டணியினர் படிக்கவேண்டும்!

ஃ

கே. கே. தங்கமயில்,
மருதங்கேணி.

கே: பிரதமர் பேரவையில் ஆற்றிய உரையை அடிக்கடி வானெலியில் ஒலிபரப்புகிருர்கள். எதிர்க்கட்சித்தலைவரின் உரையை ஒலிபரப்புவதில்லையே. இதைப்பற்றி நீங்கள் என்ன நினைக்கிறீர்கள்?

ப: இதுதான் பிர[illegible] ஆர். அடிக்கடிப்[illegible] பேசும் யூ.என்.பி. (சன)நாயகத்தின் வண்டவாளம்!

ஃ

மஞ்சுளா செல்வநாதன்,
யாழ்ப்பாணம்

கே: பொத்துவில் பா. உ. கனகரத்தினம் வரவு செலவுத்திட்டத்திற்கு ஆதரவாக வாக்களித்ததன் மர்மம் என்ன?

ப. கொஞ்சம் பொறுத்திருந்து பாருங்கள்!

ஃ

கி. எ. வி. ஞானப்பிரகாசம்
பண்டாரவளை.

கே: தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் திசைமாறுகிருர்களா?

ப: கவலைப்படாதீர்கள்! சுதந்திரன் என்ற திசைகாட்டும் கருவி இருக்கும் வரை அவர்களுக்கும் தமிழ்மக்களுக்கும் சரியான திசையை காட்டிக்கொண்டேயிருக்கும்!

கே: மலையகத்தமிழ் மக்களுக்கு தாங்கள் கூறும் அறிவுரை யாது?

ப: சிங்களவருக்கு அஞ்சி இந்த நாட்டைவிட்டு இந்தியாவுக்கு ஓடாமல், சிங்கள இனவெறியரை எதிர்த்து நின்று இந்நாட்டிலேயேநிலையான சுதந்திர வாழ்வை அமைக்கப் போராடுங்கள் என்பதே!

ஃ

சுப்பிரமணியம்,
யாழ்ப்பாணம்

கே' கொழும்பில் தமிழக முதல்வர் எம்.ஜீ.ஆர். அவர்களின் படம் எரிக்கப்பட்டதாக செய்தி வந்ததே அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: தமிழ்நாட்டு மக்களில் பெரும்பான்மையோரின் ஆதரவைப் பெற்று தமிழகத்தின் முதல்வராகத் தெரிவு செய்யப்பட்டவர் எம். ஜீ. ஆர் அவர்கள். யார் விரும்பினுலும் விரும்பாவிட்டாலும் ஜனநாயக முறைப்படி தமிழ்நாட்டு மக்களால் தெரிவு செய்யப்பட்டு ஆட்சிக்கட்டிலில் அமர்ந்திருக்கும் தமிழக முதல்வரின் படத்தை எரிப்பது தமிழ்நாட்டு மக்களை அவமானப்படுத்துவது போன்ற செயலாகும். கருணுநிதியை விடுதலை செய்யவேண்டும் என்று கேட்பதில் தவறு இல்லை; அதற்காக தமிழகத்தின் முதல்வரது படத்தை எரிப்பது தவருனது. கண்டிக்கப்பட வேண்டியது. தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த யாரும் இச்செயலை ஆதரிக்க மாட்டார்கள்!

★ கேள்விகள் அனுப்ப வேண்டிய முகவரி:-

திருவாளர் குயுக்தியார்
238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

## தமிழ் ஈழக் கொள்கையிலிருந்து...

—2-ம் பக்கத் தொடர்

கூடிய நிலைமை இருக்கிறது. சிங்களவர் ஒருவர்தான் இந்த நாட்டின் சனதிபதியாக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. காலத்துக்குக் காலம் ஒரு தமிழர் உங்களுக்கு அகப்பட்டு விடுகிருர். கடந்த ஏழாண்டு காலமாக ஒரு தமிழர் கடந்த அரசாங்கத்தால் குத்தகைக்குப் பிடிக்கப்பட்டிருந்தார். இப்பொழுது அவர் போக வேறொருவர் வந்திருக்கிருர். ஆறு ஆண்டு காலத்துக்கு ஒருவர் தப்பித் தவறி 500 அதிகப்படி வாக்குகளோடு உங்களுடன் சேர்ந்து இருக்கிருர். தமிழ் அமைச்சராக வந்திருக்கிருர். கொஞ்சம் தவறியிருந்தால் அந்த ஸ்தானத்தைக் கூட இழந்து முழுக்க முழுக்க இது தமிழர் இல்லாதஒருஅரசாங்கமாகத் தான் அமைந்து இருக்கும்.

நாங்கள் தமிழ் ஈழம் கோருகின்றேம் என்றல் அது நாமாக கேட்டுக் கொண்டது அல்ல. இதில் இருந்து நாம் நழுவுவதாக இருந்தால் பழைய நிலையில் நாங்கள் எப்படி சம உரிமையோடு வாழ்ந்தோமோ அப்படி இங்கே ஒவ்வொரு தமிழனும் சிங்கள மக்களோடு சம உரிமையோடு வாழ வேண்டும். இங்கிருக்கும் ஒரு தமிழன் பிரதமராக வரக்கூடிய வாய்ப்பு சிங்கள மக்களைப் போன்று இருக்க வேண்டும். ஒவ்வொரு தமிழனும் சிங்கள சகோதரர்களுக்கு இருக்கக்கூடிய வாய்ப்புக்கள் அத்தனையையும் அனுபவிக்க வேண்டும். வட இலங்கையில் இருந்தாலும் சரி, தென்னிலங்கையில் இருந்தாலும் சரி, தமிழன் சரிசமமாக வாழக்கூடிய உரிமை வருமாக இருந்தால், அந்த உத்தரவாதத்தை நீங்கள் தருவீர்களாக இருந்தால் நாங்கள் தமிழ் ஈழக்கொள்கையை மறுபரிசீலனை செய்யத் தயாராக இருக்கிறேம். ஆனல் இன்றைக்கு இருக்கும் நிலை காலம் கடந்துவிட்டது. 15, 20. ஆண்டுகளுக்கு முன்பு கௌரவ பிரதமர் இந்த நடவடிக்கையை எடுத்திருந்தால் இந்த நாட்டில் ஒற்றுமையை நிலை நாட்ட நினைத்திருந்தால் அது சரியாக இருந்திருக்கும். இன்று 15, 20. ஆண்டுகள் கழிந்துவிட்டன. எங்கள் மத்தியிலே ஒற்றுமையைக் கொண்டுவருவது கஷ்டம் ஆகவே எங்களுக்கென்று ஒரு வழியை நாங்கள் வகுக்க வேண்டி வந்திருக்கின்றது.

எங்கள் பிரதேசம் நீங்கள் எங்களை அடிமைப்படுத்தி எடுத்த பிரதேசம் அல்ல. இன்று எல்லோரும் சரித்திரம் பேசுகிருர்கள். யாரைப் பார்த்தாலும் சரித்திர நிபுணர்களாகிவிட்டார்கள். ஒவ்வொருவரும் தாம் சரித்திர நிபுணர் என்று புதிய கருத்துக்களைக் கூறுகின்றர்கள். இந்த நாட்டிலே அந்நிய ஏகாதிபத்தியம் அடி எடுத்து வைத்த போது யாழ்ப்பாணத்தில் ஒரு தனித்தமிழ் இராச்சியம் இருந்தது. அதுபோலக் கண்டியில் ஒரு இராச்சியம் இருந்தது. இந்த இரண்டு இராச்சியங்களையும் போரில் அன்னியர் அடிமைப்படுத்தினர். எங்கள் இறைமையை நாங்கள் சரணுகதி வைக்கவில்லை. நாங்கள் போரில் தோற்றேம்எங்களிடம்படைபலம் இருந்தது. ஆனல்,அன்னியர் புதிய பாணியில் பீரங்கி, துப்பாகிக்கொண்டு எங்களைத் தாக்கினர், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் மடிந்த பின்னர்தான் தமிழ் மக்களுடைய இறைமை பறிபோனது.

அன்னிய ஏகாதிபத்தியவாதிகளான ஆங்கிலேயர்கள் இந்த நாட்டைவிட்டுச் சென்ற நேரம் அவர்கள் எங்கள் இறைமையை எங்களிடம் கொடுத்துச்சென்றிருக்கவேண்டும்.ஆனல், அவர்கள் எங்கள் இறைமையை உங்களிடம் கொடுத்துவிட்டுச் சென்றுவிட்டார்கள். வட மாகாணத்தில் சங்கிலியின் இறைமை பறிபோன போது இங்கிருந்த சிங்கள மக்களோ மன்னர்களோ எங்கள் உரிமை பறிபோய் விட்டதே என்று குரல் எழுப்பவில்லை. நாம் அன்று வைத்திருந்த ஈழத்தையே இன்று கேட்கின்றேம். நீங்கள் விரும்பினல் என்ன விரும்பாவிட்டால் என்ன, தராவிட்டால் என்ன நாளுக்குநாள் நிமிடத்துக்கு நிமிடம் தமிழ் ஈழம் அமைந்து கொண்டுதான் வருகின்றது. அதை யாரும் மறுக்கமுடியாது.

கடந்தகலவரத்தின்போது பல்லாயிரக்கணக்கான மக்கள் வட இலங்கையில் குடியேறினர்கள். மிக விரைவில் தமிழ்நாடு சிங்களநாடு என இரண்டு நாடுகள் இங்கு உருவாகப்போகின்றது. நாங்கள் இறந்துவிடலாம். ஐந்து, பத்து ஆண்டுகளிலே நாங்கள் மடிந்துவிடலாம். இந்தத் தலைமுறையிலே இருக்கிற தலைவர்கள் எல்லோரும் மடிந்துவிடலாம். ஆனல், என்றைக்காவது ஒருநாள் தமிழ்ஈழம் அமையத்தான் போகிறது. சுதந்திரத் தமிழ் ஈழம் அமையத்தான் போகிறது. தமிழ் ஈழத்தைப் பொறுத்தவரையிலே அது என்றைக்கோ அமைந்துவிட்டது என்றுதான் நான் கூறுவேன். நீங்கள் தொடர்ந்து ஆட்சியை நடத்துங்கள். ஏனென்றல் உங்களிடம் படைபலம் இருக்கிறது.

சுதந்திரம்பற்றிப் பேசுகிறீர்கள்.சனநாயகம்பற்றிப் பேசுகிறீர்கள்; அன்று போர்த்துக்கேயரும் ஒல்லாந்தரும் ஆங்கிலேயரும்தங்களுடைய படைபலத்தைக் கொண்டுதான் எங்கள் வீரர்களை எங்கள் மூதாதையினரைத் தாக்கி அவர்களை மானச் செய்து எங்கள் சுதந்திரத்தைப் பறித்தார்கள் அதைத்தான் நீங்களும் செய்யமுயற்சிக்கிறீர்கள்,

இன்று யாழ்ப்பாணத்திலே ஓர் இராணுவ முகாம், பலாலியிலே ஓர் இராணுவ முகாம். அதுபோதாதென்று யாழ்ப்பாணப் பட்டினத்திலே ஓர் இராணுவ முகாம். அது போதாதென்று பலாலி விமான நிலையத்திலே ஓர் இராணுவ முகாம். முல்லைத்தீவிலே ஓர் இராணுவமுகாம். வவுனியாவிலே ஓர் இராணுவ முகாம். கண்டியிலே இராணுவ முகாம் இருப்பதாக காலி, மாத்தறையிலே இராணுவமுகாம் இருப்பதாக நான் கேள்விப்படவேயில்லை. எங்களை அடக்கத்தான்; எங்களுடைய உரிமைகளைப் பறிக்கத்தான் இப்படியாக இராணுவ முகாம்களை எல்லாம் அமைக்கிறீர்கள்அப்படியாக இராணுவ முகாம்களை அமைத்ததால்தான்ஒரு காலத்தில் தமிழர்களுடைய உரிமைகளெல்லாம் பறிபோனது.

கடைசியாக வன்னி மண்ணையாண்ட பண்டார வன்னியனை மூன்று முனைகளிலே தாக்கித்தான் ஆங்கிலேயர்கள் அவனைத் தோற்கடித்தார்கள். அதை நாம் மறந்துவிடவில்லை. என்றைக்காவது ஒருநாள் உங்களுடைய இராணுவ முகாம்களை, அவை எத்தனை இராணுவ முகாம்களாக இருந்தாலும், அவற்றை எதிர்த்துச் சுதந்திர தமிழ் ஈழம் அமையத்தான்போகிறது,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவுசெய்யப்பட்டது

## சிங்கப்பூர்பாணி—

— 1-ம் பக்கத் தொடர்

வையில் அண்மையில் அளித்துள்ள உறுதிமொழிகளை குழிதோண்டிப்புதைப்பது ஆகும்!

தேசிய அரசுப்பேரவையில் எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கததின் கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ஜே. ஆர், சோசலிசநாடுகளில் உள்ளது போன்று, தமிழ் தேசிய இனத்துக்கும் அதன் சுயநிர்ணய உரிமையை தாமும் வழங்கப் போவதாக அண்மையில் கூறியிருந்தார். பிரதமர் அவ்வாறு கூறிவாய் மூடுமுன்னர், பிரிவினைத் தடைச் சட்டம் வர இருப்பதை நாளேடுகள் வெளியிட்டிருக்கின்றன.

சிங்கப்பூரைப் பின்பற்றி ஓர் பாஸிஸ ஆட்சியை இங்கு ஏற்படுத்த முயற்சி நடப்பதாக வரவுசெலவுத்திட்ட விவாதத்தின்போது எதிர்க்கட்சி முதல்வர் அமிர்தலிங்கம் சுமத்தியிருந்த குற்றச்சாட்டு இப்போது உண்மையாகிவருகிறது.

அடுத்த ஆண்டு (1978) பெப்ரவரி 4ம் நாள் ஜனாதிபதியின் சர்வாதிகாரக் கதிரையில் உட்காருவதற்கு முன்னர், பிரதமர் ஜே. ஆர். சகல அடக்கு முறைச் சட்டங்களையும் ஆக்கிக்கொண்டு விடுவாரென்றும், இன ஒதுக்கலுக்கும், இன ஒடுக்கலுக்கும் எதிரான ஆண்டாக ஐ. நா. சபையினுல் பிரகடனப்படுத்தப்பட்ட அடுத்த ஆண்டில் ஜனநாயக உரிமைகளையும், சுதந்திரத்தையும் நிலைநாட்ட கொடியபாஸிஸ சட்டங்களை எதிர்த்து தமிழ் தேசிய இனம் ஈழத்தில் கடுமையான போராட்டங்களை நடத்தவேண்டி நேரிடும் என்றும் அரசியல் அவதானிகள் கருதுகின்றனர்.

## சென்னையில் உலகத் தமிழ் பண்பாட்டு மாநாடு

உலகத்தமிழ்ப் பண்பாட்டு இயக்கத்தின் முதலாவது மாநாடு திட்டமிட்டபடி சென்னையில் டிசெம்பர் 16, 17, 18ம் திகதிகளில் நடைபெறவிருப்பதாக மேற்படி இயக்கத்தின் பொதுச் செயலாளரும் அமைப்பாளருமான குரும்பசிட்டி இரா. கனகரத்தினம் சுதந்திரனுக்கு தெரிவித்தார். இந்த மாநாட்டு ஏற்பாடுகளைகவனிக்க மலேசியாவை சேர்ந்த ந. வீரப்பன் ஏற்கெனவே சென்னை சென்றுள்ளார். திரு. கனகரத்தினம் டிசெம்பர் 12ல் சென்னை செல்கிருர்.

தமிழகத்தில் நிலவும் அரசியல் சூழ்நிலைகளால் மாநாட்டில் கவியரங்கும், கருத்தரங்கும் மட்டுமே இடம் பெறுமென்று திரு. கனகரத்தினம் தெரிவித்தார்.

இக்கருத்தரங்கில் ரீயூனியனிலிருந்து தேவகுமார், இந்தோனேசியாவிலிருந்து ஸ்ரீராமுலு, அந்த மானிலிருந்து சுப. சுப்பிரமணியம். ஆகியோரும் மற்றும் லண்டன், பிரான்ஸ், மலேசியா, இலங்கை ஆகிய இடங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கலந்துகொள்ள இருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

## சோதிடம்

ஜனன பத்திரம் கணிப்பு ஆலோசனை, மணப் பொருத்தம், மற்றும் சோதிட விடயங்களுக்கு, கட்டணமதிகமானுலும், சென்ற 27-3-1977ல் இப் பத்திரிகையின் வாசக நேயர்களின்பாராட்டைப் பெற்ற, அறிவியல் சோதிடர் திரு. அ. வி. கணேசநாதனை நேரில் கலந்தாலோசியுங்கள்.

பாதிரியடைப்பு,
வீரமாணிக்கதேவன் துறை
மயிலிட்டி.

---

**கிங்ஸ்லி** (கொழும்பு) — 4-வது வாரம்

கமலஹாசன், ரஜனிகாந்த்,
ஸ்ரீதேவி, விஜயா நடித்த-
கே. பாலச்சந்தரின்

# மூன்று முடிச்சு

**வெலிங்டன்** (யாழ்நகர்)

சிவாஜி கணேசன்
— நடித்த —

## தெய்வ மகன்

**கெப்பிட்டல்** (கொழும்பு) **விஜயா** (மட்டுநகர்)

ஜெய்சங்கர்,
—நடித்த—

# வல்லவன் ஒருவன்

(புதிய கொப்பி)

9-வது வாரம்

**லிடோ** (யாழ்ப்பாணம்)

எம். ஜி. ஆர்., லதா
நடித்த —

## நீதிக்கு தலை வணங்கு

(ஈஸ்ட்மன் கலர்)

---

5-வது வாரம்

**செல்லமகால்** (கொட்டாஞ்சேனை)

சிவாஜி, ஜெமினி லக்ஷ்மி,
நாகேஷ், சுந்தரராஜன்,
வீ. கே. ராமசாமி

மற்றும் பலர் நடித்த

# உனக்காக நான்

**கெயிட்டி** [கொட்டாஞ்சேனை]

எம். ஜி. ஆர்., மனோகர், பத்மினி,
ஈ. வி. சரோஜா, ரி. கே. மதுரம் நடித்த-

# அரசிளங்குமரி

(புதிய கொப்பி)

**ரீகல்** (மட்டுநகர்) — 5வது வாரம்

ஜெயசங்கர் -நடித்த

## துணிவே துணை

இப்பத்திரிகை கொழும்பு -12, 194ஏ, பண்டாரநாயக்கா வீதியில் [illegible] சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் நிறுவனத்தாரால் 1977ம் ஆண்டு டிசெம்பர் மாதம் 9ம் திகதி வெள்ளிக்கிழமை [illegible] பதிப்பு: வஸ்தியன் அச்சகம் பிரதான வீதி, யாழ்ப்பாணம்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org